
"KALAA POOSHANAM"
K.S.SIVA... 
RETIRED ... PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# திருக்கோணேஸ்வரத் திருப்பதிகமும் விரிவுரையும்

89



இராவணன் வெட்டு

வெளியீடு

சிவதரும வள்ளல் திரு நன்னித்தம்பி சிவதாசன்

புலவர் அவர்களுக்கு

அன்பளிப்பு

அ. ஸ்ரீஸ்கந்தராஜா

"KALAA POOSHANAM"
K.S.SIVA[illegible]RAJAH
RETIRED [illegible] PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

ஓம்

# சமர்ப்பணம்



மாதுமை அம்பாள் உடனுறை திருக்கோணேசப் பெருமான்

ஓம்

# திருக்கோணேஸ்வரத் திருப்பதிகமும் விரிவுரையும்

நூலாசிரியர்
சைவப்புலவர் திரு. அ.ஸ்ரீஸ்கந்தராசா M.A

வெளியீடு
சிவதரும வள்ளல் திரு நன்னித்தம்பி சிவதாசன்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திருக்கோணேஸ்வரத் திருப்பதிகமும் விரிவுரையும் |
| நூலின் வகை | : | சமயம் |
| நூலாசிரியர் | : | சைவப்புலவர் திரு. அ.ஸ்ரீஸ்கந்தராசா M.A |
| பதிப்புரிமை | : | சிவதரும வள்ளல் திரு. நன்னித்தம்பி சிவதாசன் |
| வெளியீடு | : | சிவதரும வள்ளல் திரு. நன்னித்தம்பி சிவதாசன் |
| விலாசம் | : | திருக்கோணமலை |
| வெளியீட்டு திகதி | : | நந்தன வருடம் ஆனித்திங்கள். 12ம் நாள் செவ்வாய்க்கிழமை. ஆனி உத்தரம். 2012 (26.06.2012) |
| இடம் | : | திருக்கோணேஸ்வரம் கோவில் |
| பக்கங்கள் | : | 82 |
| நூலின் அளவு | : | 1/8 |
| தாளின் வகை | : | 70 கிராம் பாங்க் |
| அச்சிட்டோர் | : | அஸ்ரா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடட் 43, திருஞானசம்பந்தர் வீதி. திருக்கோணமலை. 0777 426175. 026 7391070 |
| நூலின் விலை | : | 120.00 |

நூல் கிடைக்கப்பெறும் இடம்
: திரு.பொ. கந்தையா (காந்தி மாஸ்டர்)
முத்துக்குமாரசுவாமி கோவிலடி
திருக்கோணமலை

# உள்ளடக்கம்


1. முகவுரை:
நூலாசிரியர் சைவப்புலவர் திரு.அ.சிறீஸ்கந்தராசா. எம்.ஏ - 04

2. ஆசியுரை:
திருவாவடுதுறை மகாசந்நிதானம் - 07

3. அணிந்துரை:
க.அருள்சுப்பிரமணியம். செயலாளர்.
திருக்கோணமலை திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை - 08

4. வாழ்த்துப்பா:
சைவப்புலவர் திரு.முத்துக்குமாரு பாலசுப்பிரமணியம்
பி.ஏ. டிப்ளோமா. எம்.பில்
யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆட்சிமன்றஉறுப்பினர். - 12

5. வாழ்த்துப்பாமாலை
முதுபெரும் புலவர். கலாபூஷணம். புலவர்மணி
வை. க. சிற்றம்பலம் - 14

6. வெளியீட்டாளர் உரை:
சிவதரும வள்ளல் திரு நன்னித்தம்பி சிவதாசன் - 15

7. திருக்கோணேஸ்வரத் திருப்பதிகமும் விரிவுரையும் - 17

8. முடிவுரை - 81

# முகவுரை

நார்பயில் தேய்ந்தன்னில் நான்மறை பயிலா நாட்டில்
விரவுதல் ஒழிந்து தோன்றல் மிக்க புண்ணியத் தானாகும்
தரையினில் கீழை விட்டுத் தவஞ்செய் சாதியினில் வந்து
பரசம யங்கட் செல்லாப் பாக்கியம் பண்ணொ ணாதே

- சிவஞானசித்தியார் -

திருக்கோணமலையில் அருள்பாலிக்கும் மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமானை வந்திக்கவும், தோத்திரிக்கவும் பெற்றபேறு பிராரப்துவ கன்மத்திலே உதித்தாகும். இப்பதிகத்துக்கு உரை உபகரிக்க என்னை உந்தித்தது 'ஒன்றாய் உடனாய்' வழிநடத்தும் சிவனார் திருவருளேயாகும்.

கோணேசப் பெருமானின் திருவருள் வரலாற்றை விளக்கும் முதல்நூல்கள் நான்காகும்.

1. தெட்சணகயிலாய மாண்மியம்
2. திருக்கோணாசல வைபவம்

   ஆசிரியர்: வே.அகிலேசபிள்ளை

3. திருக்கோணேஸ்வரம்

   இணை ஆசிரியர்:

   (அ) புலவர் சிவசிறி வை.சோமாஸ்கந்தகுருக்கள்

   (ஆ) சைவப்புலவர்.திரு.அ. சிறீஸ்கந்தராசா, எம்.ஏ

4. திருக்கோணேஸ்வரம்

   ஆசிரியர் : திரு.செ.குணசிங்கம் எம்.ஏ

   கோணேஸ்வரப் பெருமானின் புகழபேசும்
   நான்காவது நூல் இதுவாகும்.

"திருக்கோணேஸ்வரப் பதிகமும் விரிவுரையும்"

திருவாவடுதுறை மகாசந்நிதானப் பெரியாரின் ஆசீர்வாதம் கிடைத்தமை அருட்கருணையாகும். பாவியாகிய நான் சந்நிதானம் அவர்களுக்குச் செய்யகூடிய கைங்கரியம் ஒன்றும் இல்லை. அவருடைய இணைத்திருவடிகளுக்கு எனது மானச அட்டாங்க நமஸ்காரம் ஆகும். அவரின் அறிமுகத்தைப் பெற்றுத்தந்த சிவபூசாதுரந்தரரும், நடராசப் பெருமானின் திருவடிகளை இமைப்பொழுதும்

மாறவாத உத்தம பிரமச்சாரி, திருவளர்.சி.சக்திகிரீபன் கருவிலே திருவுடையார் தன்னுடைய ஆவியையும் உடலையும், பொருளையும் இறைவனுக்கு அர்ப்பணித்த சிவனடியார்.

திருக்கோணேஸ்வரச் செயலாளர் திரு க.அருள்சுப்பிரமணியம், அவர்கள் அளித்த அணிந்துரையை வெளியீட்டுக்கு அனுமதியாகக் கருதுகின்றேன்.

வாழ்த்துப்பா வழங்கிய சைவப்புலவர் திரு மு.பாலசுப்பிரமணியம், பி.ஏ, டிப்ளோமா, எம்.பில் முதலிய கல்விப்பட்டங்களுடன் முதலாந்தர அதிபராகக் கடமையாற்றி இளைப்பாறிய ஒரு கல்விமான். சைவப்புலவர் பரீட்சையில் சித்தியடைந்ததுடன், சோதிடத்துறையிலும் சிறப்பாற்றல் படைத்தவர். அவரால் உபகரிக்கப்பட்ட வாழ்த்துப்பா நட்பின் சின்னமாகும்.

காந்தி மாஸ்டர் எனப் பெருமையாக அழைக்கப்படும் திரு.பொ.கந்தையா ஆசிரியர் இந்நூலுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துள்ளார். வாழ்த்துப் பாமாலை தந்து என்னை ஆசீர்வதித்தருளிய முதுபெரும் புலவர் கலாபூஷணம், புலவர்மணி என்ற கீர்த்திகளை அரசாலும், ஆர்வலர்களாலும் சொரியப்பட்ட முதுபெரும் அறிஞராவார். திரு.வை.க. சிற்றம்பலம் அவர்கள் சிவனார் தன் தேவைக்காக 98 வயதிலும் வைத்திருக்கின்றார்.

"இராவணன் வெட்டுத் தோற்றத்தை முன் அட்டையிலும், கோவிலின் இன்றைய தோற்றத்தை பின் அட்டையிலும் அடியார்களின் உள்ளம் உருகக் கூடிய வகையில் காணக்கூடியதாக இருக்கின்றன. இவை அஸ்ரா பிரிண்டர்ஸ் நிறுவனத்தின் அளப்பரிய திறமைக்குச் சான்றாகும்.

திரு. கணபதிப்பிள்ளை நாகராசா சுவாமியின் படங்களைத் தந்தும் அச்சகத்தாருக்கு உதவியும் வழங்கியுள்ளார்.

இந்நூலை வெளியிடுவதற்குத் தன் வளத்தைப் பயன்படுத்திய சிவதரும வள்ளல் நன்னித்தம்பி சிவதாசன் நாளும் பொழுதும் சிவனார் சிந்தையில் வாழும் சிவனடியார். அன்னார் பல சிவதருமங்களுக்கும், சிறப்பாக வசதி குறைந்த மாணவர்களுக்கும் சிவனார் தந்த செல்வத்தை சிவனார் தொண்டுக்குப் பயன்படுத்தும் சிவபக்தன்.

அச்சகத்தாருக்கு எனது மனமார்ந்த நன்றி உரித்தாகும்.

"மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வ மென்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குர வென்னுந் தொல்விடம் பிழைத்தும்
புல்வரம்பாய பலதுறை பிழைத்தும்
தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி"

இப்பதிகத்துக்கு விரிவுரை வகுக்க உந்தப்பட்டேன்.

கோணேசப் பெருமானின் இணைத் திருவடிகளுக்கு வணக்கம்.

சைவப்புலவர் அ.சிறீஸ்கந்தராசா எம்.ஏ
திருக்கேதீஸ்வரம்
1933-05-25

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை – 609803
நாகை மாவட்டம்.
போன் : 04364 – 232021
thuraisaiadheenam@gmail.com

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்





நாள் : 15.05.2012

**நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க**
**இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க**
**கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க**

புண்ணிய பூமியாம் ஈழத்திருநாட்டில் அறுபதிற்கும் அதிகமான சைவத் தலங்களை தன்னகத்தே கொண்டு விளங்கும் திருக்கோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள திருக்கோணேசுவரர் திருத்தலம் ஞான சம்பந்தரால் பாடப்பெற்ற பெருமையுடையதாகும். "தாயினும் நல்ல தலைவர் என்று அடியார் தம்மடி போற்றி இசைபார்கள்" என்று தமது பதிகத்தில் திருக்கோணேசுவரர் பெருமானைப் பற்றி குறிப்பிடுகிறார். தலத்தின் இயற்கை எழில் கொஞ்சும் அழகை "ஆழிபுடைசூழ்ந்து ஒளிக்கும் ஈழந்தன்னில் மன்னு திருக்கோணமலை மகிழ்ந்த செங்கண் மழவிடையார்" எனச் சேக்கிழார் பெருமான் குறிப்பிடுகிறார். இன்றைக்கு சுமார் 1200 ஆண்டுகளுக்கு முன்னரே இத்திருக்கோயில் தேவாரம் பெற் ஒளிவீசியதும் சோழ மற்றும் பாண்டிய மன்னர்களால் திருப்பணி செய்யப் பெற்றதும் இதன் வரலாற்று பெருமைகனா விளங்கின்றன. இத்தலப்பதிகங்களை நமது அன்பிற்கினிய திரு. அ. சிறீஸ்கந்தராசா எம்.ஏ. அவர்கள் உரையுடன் புத்தகமாக வெளியிடுவது அறிந்து மகிழ்ந்தோம். சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் எனும் மணிவாசகப் பொருமான் வாக்கிற்கிணங்க சைவ பெருமக்கள் அனைவரும் பதிக பொருளை உணர்ந்து சிவானந்தம் பெற நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானமா நடராசப் பெருமான் திருவடி மலர்களை சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

# அன்பே சிவம்

# திருக்கோணேஸ்வரம்

அடிக்கொரு லிங்கம் உள்ளதென பெரும் ஞானிகளால் கூறப்பட்ட புனித பூமி திருகோணமலை. முப்புறமும் நீல நிறமாகக் காட்சியளிக்கும் கடலால் சூழப்பட்ட மலையுச்சியைத் தனது உறைவிடமாக வரித்துக் கொண்டு தன்னிடம் வருவோருக்கெல்லாம் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார் எம்பெருமான் கோணேஸ்வரர் இயற்கை எழில் பூத்துக் குலுங்கும் அவருடைய அமைவிடமான திருக்கோணேஸ்வரத்தில் கால்களைப் பதித்த கையோடு. அலை பாயும் இயல்பினைக் கொண்டிருக்கும் மனங்களெல்லாம் அமைதியின் பிடியில் ஆளாகி விடுவதைப் பக்தர்கள் உணர்வார்கள். திருக்கோணேஸ்வரம்-பூமித்தாயின் மடியில் மிகப் புனிதமான அரிதான திருத்தலமாகும்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் கி.பி.7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். சிறு பராயத்திலேயே பல்லாயிரக் கணக்கான ஆலயங்களைத் தரிசித்து அங்கெல்லாம் எழுந்தருளியிருக்கும் இறைவனையும் அத்தலங்களின் பெருமைகளையும் பதிகங்களாகப் பாடியருளியவர். அவரது காலம் போக்குவரத்து வசதிகள் அரிதாக இருந்த காலம். இருப்பினும் ஈழத்திருநாட்டிலே மிகுந்த கீர்த்தியோடு விளங்கிய திருக்கோணேஸ்வரம் திருக்கேதீஸ்வரம் ஆகிய சிவாலயங்கள் பற்றிய அனைத்து விபரங்களும் அவருக்குத் தெரிந்திருக்கிறது. கடலால் பிரிக்கப்பட்ட ஈழத்திரு நாட்டிலே அமைந்திருந்த விசேட ஆலயங்களைப் பற்றி மற்றவர்கள் வாயிலாக அறிந்திருந்ததையும் தாண்டி, இறைவனது கடாட்ச விசேடத்தினால் வாய்க்கப் பெற்றிருந்த அகக்கண்ணின் சக்தியினால் திருக்கோணேஸ் வரத்தினதும் திருக்கேதீஸ்வரத்தினதும் பெருமைகள் பற்றிக் காலத்தையும் கடந்து நிற்கக்கூடிய பதிகங்களைப் பாடியருளினார். திருக்கோணேஸ்வரத்திற்கு அவர் அருளிய 11 பதிகங்களில் 7 வது பதிகம் பிற்காலத்தில் முறையாகப் பாதுகாக்கப்படாமையினால் தவறிவிட்டது என அறியப்படுகிறது.

திருக்கோணேஸ்வரம் இன்றளவும் பலவித சோதனைகளுக்குள்ளாகியும் உலகெங்கிலுமுள்ள சைவப் பெருமக்களினால் மிகுந்த பக்தி சிரத்தையோடு தரிசிக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு வேற்று மதத்தவர்களும் பெருமானது அளப்பரிய கருணையினில் நம்பிக்கை கொண்டு தினந்தோறும் தரிசித்துச் செல்கிறார்கள்.

சமூக அரசியல் மாற்றங்களினால் உண்டாகும் உணர்வுகள் காரணமாக உண்மைகள் மறைக்கப்பட்டு வரலாறுகள் திரித்தெழுதப்படும் காரியத்திற்கு திருக்கோணேஸ்வரத்தின் வரலாறும் விதிவிலக்கல்ல. ஆயினும் ஞானசம்பந்தர் கி.பி.7ம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் என்பதை எப்படி யாராலும் அழித்தெழுத முடியாதோ, அவரால் பாடப்பட்டு காலத்தால் நிலைத்திருக்கும் திருக்கோணேஸ்வரப் பதிகங்களும் அழித்தெழுதப்பட முடியாததாகும். ஞானசம்பந்தர் இப்பாடல்களை பாடியுள்ளார் என்பது உண்மை. இப்புனிதத்தலம் 1300 ஆண்டுகளுக்கு முன்னரே மிகவும் உயர்ந்த நிலையில் இருந்ததென்பதற்கு அசைக்க முடியாத சான்றாக இருந்து வருகின்றது.

ஒவ்வொரு முறையும் திருக்கோணேஸ்வரப் பதிகங்களைப் பாடுந் தோறும் பெருமானின் கருணையும் ஞானசம்பந்தரின் பக்தியும் எம் மனங்களிலே பதிவது போன்று இத்திருத்தத்தின் வரலாறு சார்ந்த உறுதியான உண்மையும் அதனூடே கலந்திருப்பதையும் உணரக்கூடியதாயிருக்கிறது.

இத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கும் இத்தேவாரத் திருப்பதிகங்கள் எம்மக்களிடையே வேரூன்ற வேண்டும். எமது இளம் சந்ததியினர் இவற்றின் பெருமைகளை உணர வேண்டும். அதற்கான தேவை இப்போது மிகுதியாகக் காணப்படுகிறது.

ஏற்கனவே பல பெரியார்கள் இம்முயற்சியில் ஈடுபட்டுத் திருக்கோணேஸ்வரப் பதிகங்களை நூலாக வெளியிட்டு மக்களிடம் விநியோகித்துப் பெருந்தொண்டு ஆற்றியிருக்கிறார்கள். இந்த வரிசையிலே இப்போது சைவப்புலவர் அம்பலவாணர் சிறீஸ்கந்தராசா ஐயா ஈடுபட்டிருக்கிறார்.

ஐயா அவர்கள் 2009 ம் ஆண்டில் பதிப்பித்து வெளியிட்ட "திருக்கேதீஸ்வரப் பதிகங்களும் ஆய்வுரையும்" என்ற நூல் சைவப் பெருமக்களால் பெரிதும் வாசிக்கப்படும் பேறைப் பெற்றது. இப்போது திருக்கோணேஸ்வரப் பதிகங்களை ஆய்வுசெய்து வெளியிடும் கைங்கரியத்தை மேற்கொண்டுள்ளார். அனைத்து பதிகங்களுக்குமான பதவுரை, பொழிப்புரை, ஆகியவற்றைச் சிறப்புற தந்ததோடு நில்லாமல், அனைத்து சீவராசிகளுக்கும் உயிர் மூச்சாய் விளக்கும் பெருமானது குணாதிசயங்களையும் அவற்றில் பொதிந்துள்ள, ஆழ்ந்த தத்துவ விசேடங் களையும் தனக்கே உரிய பாணியில் மிக நேர்த்தியாகச் சொல்லியிருக்கிறார்.

ஐயாவினுடைய விளக்கங்களைப் படிக்கும் போது கிடைக்கும் அனுபவம் மேன்மையானது. அவரது சிந்தனைகள் நிதானமாகத் தொடங்கிப் படிப்படியாக வேகமெடுக்கும் சக்தி கொண்டவையாக இருக்கின்றன. சைவசமயத்தின் சாராம்சத்தை எல்லோரும் விளங்கிக் கொள்ளும் பாங்கில் முன்வைக்கும் திறமையே அவரது பலம். வாசிப்பதை நிறுத்திவிட்டு அவர் எழுதியவற்றை ஆற அமர சிந்திக்கும் போது அவர் திருக்கோணேஸ்வரப் பெருமானின் அருளுக்கு முற்றாக ஆட்பட்டிருக்கிறார் என்கிற உண்மை புரிய ஆரம்பிக்கும். அவர் சொன்னதிலிருந்து, சொல்லாமல் விட்டவைகளை நம் சிந்தனையில் உருவகித்துக் கொண்ட வாசிப்பினைத் தொடர வேண்டுமென்னும் சீரிய அனுபவத்தையும் பெறக்கூடியதாயிருக்கும்.

இலங்கை வேந்தன் இராவணன் சிவபெருமானின் தீவிர பக்தன். ஞானசம்பந்தரின் திருக்கோணேஸ்வரப் பதிகங்களில் எட்டாம் தேவாரமான " எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால் " என்ற பதிகத்தில் இலங்கை வேந்தனின் செருக்கினை அழித்து அருள் செய்த பெருமான் என்ற ஞானசம்பந்தர் வியந்து நிற்கும் நிலை காட்சிப்படுகிறது.

புராணங்களில் கூறுப்படுகிற பல கதைகள் பெருமானது பெருமைகளைக் கூறுவன. ஆயினும் அதில் காணப்படும் புனைகதைகள் நம்பமுடியாமல் உள்ளதெனப் பலர் கூறுவார்கள். இலங்கை வேந்தன் இராவணனுக்கு 10 தலைகள் உண்டு என்கிற கருத்தை இங்கே எடுத்துக் கொள்ளலாம். அதற்கு விளக்கமளித்த அருட்திரு இராமலிங்க வள்ளலார் அவர்கள்.

> வேத நெறி ஆகமத்தின் நெறி பவுராணங்கள்
> விளம்பு நெறி இதிகாசம் விரித்த நெறி முழுவதும்
> ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் கூட்டி
> உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே

என்னும் திருவருட்பா மூலம் - புராணக்கதைகளில் காணப்படும் புனைவுகள் அகற்றப்பட்டு அவை சுட்டும் உண்மைகளை எடுத்துப் பேச வேண்டுமென்றும், அவற்றை எளிய மக்கள் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும் கூறுகிறார்.

மேற்கூறிய அரியதொரு விடயத்தை ஐயா அவர்கள் தனது ஆய்வுரையிலே

சேர்த்துக் கொண்டமை அவரது அறிவின் தீட்சண்யத்தைக் காட்டுவதாக அமைந்துள்ளது. இது எமது இளஞ் சந்ததியினருக்கு மிகவும் உபயோகமானது மட்டுமல்ல, அவர்களது சிந்தனையிலே முறையாகச் செலுத்த உதவுவனவாகவும் உள்ளது.

இந்து சமயத்தில் நிறைந்திருக்கும் புராணக் கதைகளை பலரும் பலவிதங்களிலும் விமர்சனம் செய்வதுண்டு. ஆனால் அவைகளின் இருப்பிற்கான விளக்கத்தை ஐயா அவர்கள் தனது ஆய்வுரையிலே குறிப்பிட்டுள்ளது முக்கியத்துவம் பெறுகிறது.

சைவப்புலவர் அம்பலவாணர் சிறீஸ்கந்தராச அவர்கள் சிறிய அளவில் ஆக்கிய இந்நூல் கீர்த்தியில் பெரியதாக உள்ளதை வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

திருக்கோணேஸ்வரப் பெருமானின் புனிதத்தலமான திருக்கோணேஸ் வரத்தினை வளப்படுத்தும், பெருநோக்கில் முயற்ச்சிகளை மேற்கொண்டிருக்கும் கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையினர் ஐயா அவர்களின் இச்சீரிய முயற்சியை மிகவும் பெரிதாக மதிக்கின்றனர், என்பதை இங்கே குறிப்பிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஐயா அவர்கள் நீண்ட காலம் ஆரோக்கியத்தோடு வாழ்ந்து மென்மேலும் இதுபோன்ற நன்முயற்சிகளை ஆற்ற வேண்டும் என்று எல்லாம் வல்ல எம்பெருமான் கோணேஸ்வரரைப் பிரார்த்தித்து நிறைவு செய்கிறேன்.

நன்றி.

இங்ஙனம்
கணபதிப்பிள்ளை அருள்சுப்பிரமணியம்
செயலாளர்
கோணேஸ்வர ஆலய பரிபாலன சபை
திருகோணமலை
23.09.2011
(026-3204382)

# வாழ்த்துப்பா

பெருந்திருக் கடல்சூழ் பெற்றிசேர் இலங்கை
பெற்றதாம் இறையுறை தலத்துள்
அருந்திருக் கோணேசச் சரமது பதியில்
அம்மைமா துமையொடு மாக
வருந்திருக் கோணேச் சரர்தம தடியை
வாழ்த்தியே வணங்குசம் பந்தர்
தருந்திருப் பாடல் தாங்கிடும் உரைதன்
தன்மையை என்னவென் பேனே

அம்பல வாணர் அருந்தவப் புதல்வர்
அறிவொளிர் சிறீஸ்கந்த ராசர்
செம்பொருள் உணர்ந்தோர் சீர்சைவப் புலவர்
சேர்தமிழ் ஆங்கிலப் பெரியோர்
உம்பரில் உயர்ந்தோர் உணர்முது மாணி
ஒருபொரு ளியல்கல்வி இரண்டில்
தம்பெருங் கல்வி விரிவுரை அதிபர்
தந்தரும் உரையிறை வரமே

பாலறா வாயர் பருகிடத் தந்த
பாலது பதிகமோ டிங்கு
மேலதே தேனாய் மெத்தவே இணைத்த
மிளிர்பத வுரைபொழிப் புடனே
காலமே காணும் கருத்துயர் விளக்கம்
கவினுறு தத்துவப் பொதிவு
சீலமே அரிய சிறீஸ்கந்த ராசா
செப்பினர் ஒப்பவே றெதுவோ

பேர்திருக் கோணேச் சரரடி வாழ்க
பேசும்மா துமையவ ரோடு
பார்திருத் தீர்த்தம் பாவநா சம்மேல்
பாங்குறு தலமதும் வாழ்க
சீர்திருப் பெரியோர் சிறீஸ்கந்த ராசர்
சேமமோர் சீரதாய் வாழ்க
நேர்திருப் பதஞ்சேர் நீளுரை வாழ்க
நிலமது நிலைபெற நிறைந்தே

புலவர் மு.பாலசுப்பிரமணியம்
பி.ஏ. டிப்ளோமா. எம்.பில்,
ஸ்ரீ லங்கா அதிபர் சேவை I
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆட்சிமன்ற உறுப்பினர்

20.01.2012

# வாழ்த்துப் பாமாலை

சைவப்புலவர், தமிழ்ச்சான்றோன், முதுமாணி, முன்னாள் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி அதிபர், யாழ்பல்கலைக் கழக வருகை விரிவுரையாளர் திருவாளர் அம்பலவாணர் சிறீஸ்கந்தரான் மேல் வாழ்த்து

கதிரவனே குணகடலில் கதிர்வீசி எழுவது போல்
மிருசுவில் மேல்
முதிய தமிழ்ச் சங்கத்தின் தமிழ்க்கடலில் ஆங்கிலத்தில்
முளைத்த பானு
பதியினொடு பசுபாசச் சித்தாந்த ஏடெலாம்
படித்த மேதை
அதிபெரிய சிறீஸ்கந்த ராசனெனும் அறிஞானை யான்
வாழ்த்துவேனே

தலைசார்ந்த நெற்றியிலே திருநீறு முக்குறிகள்
சைவம் காட்ட
நிலையான அசையாத மலைபோல பேரறிவு
நிறைவைக்காட்ட
கலைஞானப் பன்னூல் செய் சிறீஸ்கந்த ரானெனும்
கற்ப கத்தை
நலமான ஆசியுடன் பல்லாண்டு கூறியும்யான்
வாழ்த்துவேனே

திருஞான சம்பந்தர் பாடியநற் கோணேசர்
பதிகத் தேனை
பெருஞான முடனாய்ந்து விரிவுரை நூல் எமக்களித்த
பெருஞ் சொற் கொண்டல்
ஒரு ஞானி சறீஸ்கந்த ராசாவின் உள்ளமெனும்
ஒளியாராய்ந்தே
தனிஞானக் குரவனுமாய்ப் பல்லாண்டு தொடர்ந்திருக்க
வாழ்த்துவேனே

முதுபெரும்புலவர், கலாபூக்ஷணம், புலவர்மணி வை. க. சிற்றம்பலம்
இளைப்பாறிய ஆசிரியர், வட்டுவினி, இணுவில்

# வெளியீட்டாளர் உரை

ஓம்
திருச்சிற்றம்பலம்

"சிவனொடொக் கும்தெய்வம் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனம் கடந்தன்று பொன்ஒளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே"

சிவனாரின் புகழ்கூறும் இப்பதிகத்தை வெளியிடுவதற்குக் கிடைத்த வாய்ப்புத் திருவருள் சம்பந்தமானது ஆகும். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இமயமலையின் ஒருசிகரம் இங்கே அமைந்ததென்றும் அதனால் அது தான்தோன்றி ஈஸ்வரம் என்றும் தெட்சணகயிலாய மான்மியம் ஊடாக அறியக் கிடக்கின்றது.

இத்திவ்விய தலத்திலே "மாதுமை அம்பாள் உடனுறை கோணேசப் பெருமான்" சாநித்தியம் தந்தருளுகின்றார். உலகத்தைப் படைத்துக், காத்து, அழிப்பதற்கு மூலமாய் அமைந்தது சிவசக்தி "மாதுமை அம்பாள்" என்று திருமலையில் போற்றிப் பாடப்பெற்றுள்ளது.

சிவனுக்கும், உமையாளுக்கும் உள்ள தொடர்பை மணிவாசகர் விளக்கியுள்ளார். இறைவனும், இறைவியும் கலந்துநின்று விளங்கும் நிலையினனைப் பார்க்கலாம்.

"உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப
தானால் அடியேனுன்"

திருமூலரும் இக்கருத்தை அழுத்தியிருக்கின்றார்,

"மாணிக்கத் துள்ளே மரகதச் சோதியாய்
மாணிக்கத் துள்ளே மரகத மாடமாய்
ஆணிப்பொன் மன்றினு ளாடுந் திருக்கூத்தைப்
பேணித் தொழுதென்ன பேறுபெற் றாரே"

ஈண்டு மாணிக்கம் இறைவன் திருமேனிக்கும், மரகதம் இறைவி திருமேனிக்கும், உவமையாக நிற்கின்றன. இறைவனுள்ளே இறைவி இருப்பதை விளக்குகின்றது. உமாதேவியைச் சிவன் படைத்தாரென்று கந்தபுராணம் கூறுகின்றது. ஆகினுஞ் சிவமும் சத்தியும் ஒன்றுதான். சிவன் நித்திய யோகி, அவரின் சத்தி அவர் சார்பில் உலகை இயக்குகின்றது.

சிவஞானசித்தியார் பின்வருமாறு கூறுகின்றது.

"சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான்
சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்த்திங் குலகுயி
ரெல்லாமீன்றும்
பவன்பிரம சாரி யாகும் பான்மொழி
கன்னியாகுந்
தவந்திரு ஞானத் தோர்க்கித் தன்மைதான்
தெரியு மன்றே"

உவந்திருவரும் புணர்ந்து = உவந்து இருவரும் புணர்ந்து

"மாதுமையம்பாள் உடனுறை" என்பதன் பொருள் சிவனின் வெளிப்பாடே சக்தி. அர்த்தநாரீசுரராகவும், சிவனாரின் இடப்பாகத்தில் அமர்ந்திருந்தும், வேறுவகையாகவும் அடியார்களுக்குக் காட்சி கொடுப்பர். இத்தனை ஆழ்ந்த சித்தாந்த செழும் புதையல் "உடனுறை" என்ற பதத்தில் பொதிந்துள்ளது.

இவ்வளவு தாதான்மிய உறவு எனப்படும். - பிரிக்கப்படாத உறவு
உ.ம் : நெருப்புஞ்சூடும்
நெருப்பில்லையெனில், சூடு இல்லை
இதை இலக்கண நூலோர் தற்கிழமை என்பர்

சிவனும் சக்தியும் ஒன்று இதுவே "உடனுறை" ஆகும்

சிவனார் எனக்கு அளித்த வளத்தில் ஒரு பகுதியைச் சிவனார் திருப்பணிக்கும், அவரின் அருள் வடிவங்களான ஆன்மாக்களுக்கும், பயன்படுத்துவது சிவனார் ஊழியமாகும்.

இங்ஙனம்
திரு. நன்னித்தம்பி சிவதாசன்

ஓம்

# திருக்கோணேஸ்வரத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

நிரைகழ ரரவஞ் சிலம்பொலி யலம்பு
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே.

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாக
மாகமுன் கலந்தவர் மதின்மேல்
தனித்தபே ருருவ விழித்தழ னாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற் றரளஞ்
செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினு நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் னீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ண முதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவன் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணம மலையமர்ந் தாரே.

*******************

எடுத்தவன் றருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புகழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வெண்டலை யேந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரு மறியா வண்ணமொள் ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே.

நின்றுணஞ் சமணு மிருந்துணுந் தேரு
நெறியலா தனபுறங் கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசின ரொருபான்
மெல்லிய ளொடுமுட னாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றுமொண் கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் வேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்.

ஓம்

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றினை
நந்திமகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

திருமந்திரம்

## நூல் நுதலிய பொருள்

பண்டை நற்றவத்தால் தோன்றிப் பரமனைப் பத்தி பண்ணுந்
தொண்டரைத்தானே தூயதியினில் தொகுப்பான் மார்க்கர்
கண்டநூ லோதிவீடு காதலிப்பவர்கட் கீசன்
புண்டரி கத்தான் சேரும் பரிசினைப் புகலலுற்றாம்

சிவஞான சித்தியார்

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென்மு கம்மனே

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

முகமன் - முகஸ்துதி

இந்தியாவின் சேதுக்கரையில் இருந்து திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் தன்னுடைய அகக்கண்களால் ஈழத்திலுள்ள இரு சிவன் கோவில்களைக் கண்டுகளிப்புற்று தோத்திரங்களைத் திருவாய் மலர்ந்தருளினார்.

சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறப்பட்டது.

"அந்நகரில் அமர்ந்தங்கண் இனிது மேவி
ஆழிபுடை சூழ்ந்தொலிக்கும் ஈழந்தன்னில்
மன்னுதிருக் கோணமலை மகிழ்ந்து செங்கண்
மழவிடையார தமைப்போற்றி வணங்கிப் பாடி
சென்னிமதி புனைமாட மாதோட்டத்தில்
திருக்கேதீச்சரத் தண்ணல் செய்பாதம்
உன்னிமிகப் பணித்தேத்தி அன்பரோடும்
உலவாத கிளி பெற்றார் உவகை யுற்றார்"

மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க் கோர்
வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே

-தாயுமான சுவாமிகள்

மூர்த்தி :- மாதுமையம்பாள் உடனுறை கோணேஸ்வரப்பெருமான்
மாவட்டம்:- திருக்கோணமலை, இலங்கை
தலம் :- திருக்கோணேஸ்வரம்
தீர்த்தம் :- பாவநாசம்
விருட்சம்:- சுவேதகூவிளம்

திருச்சிற்றம்பலம்

## மூன்றாம் திருமுறை

# திருக்கோணமலைத் திருப்பதிகம்

பாடியவர் :- திருஞானசம்பந்தர்மூர்த்தி நாயனார்

அவர் காலம் :- கி.பி ஏழாம் நூற்றாண்டு

பண் :- புறநீர்மை, திருமுறை 3-381

இறைவன் :- மாதுமை அம்பாள் உடனுறை கோணேஸ்வரப் பெருமான்

விருட்சம் :- சுவேதகூவிளம்

தீர்த்தம் :- பாவநாசம்

1. நிரைகழல் அரவம் சிலம்பொலி யலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்கும்
கோணமா மலை அமர்ந் தாரே

பதவுரை

நிரைகழல் அரவம் - மணிகள் வரிசையாக அமைக்கப்பெற்ற வீரக் கழல் என்னும் பாத ஆபரணத்தில் இருந்து எழும்புகின்ற ஓசையும், சிலம்பொலி - சங்கிலிச் சப்தத்தையும் எழுப்புகின்ற ஆபரணமாகிய சிலம்பையும், அலம்பும்- இவ்விரு ஓசைகளும் கலந்து எழும்புகின்ற சப்தமும், நிமலர் - மும்மலங்களும் அற்றவர், நீறணி திருமேனி- திருநீற்றினால் அலங்கரிக்கப்பட்ட திருமேனியை உடையவரும், வரைகெழுமகளோர் பாகமாப் புணர்ந்த - மலையரசன் மகளாகிய மாதுமையம்பாளை இடப்பாகத்திற் பொருந்தியவரும், வடிவினர்- பல்வேறு கோலங்களை எடுத்தவரும், கொடியணி விடையவர்- இடபக்கொடியை உடையவரும், சந்துங்காரகிற் பிளவும் - சந்தனக் கட்டைகளும் கரிய அகிற் கட்டைகளும், அளப்பரும் கனமணிவரன்றி - அளவுகடந்து பெருமளவில் பெருகுகின்ற இரத்தினக் கற்களும், கரைகெழு - கரையிலே ஒதுங்குகின்ற, குரைகடல் - ஆரவாரிக்கின்ற கடற்கரையையும், நித்திலம் கொழிக்கும் - முத்துக் களை அள்ளி வீசுகின்ற, ஓதம் - சமுத்திரத்தையும் உடைய, கோணமாமலை யமர்ந்தாரே - திருகோணமலையில் எழுந்திருக்கின்றவுரே

பொழிப்புரை

அர்த்த நாரீசுரராகி சிவபெருமானின் வலது திருவடிகளில் வீரக்கழலும், அன்னையின் இடது திருவடிகளில் சிலம்பும் ஒலிக்கின்ற திருநீறணிந்த உடலையும், இடபக்கொடியையும், உமாதேவியாரை இடப்பாகத்திலும் உடைய சிவனார் எழுந்தருளியிருக்கின்ற திருகோணமலையானது சந்தனக்கட்டைகளையும், அகிற்கட்டைகளையும், முத்துக்களையும் அள்ளி வீசுகின்ற சமுத்திரக்கரையை உடையது. இப்பாடல் அர்த்தநாரீஸ்வர முகூர்த்தத்தை விளக்குகின்றது.

விளக்கவுரை

தேவியாகிய கிரியாசக்தி இடது திருவடியாகவும், சிவனின் ஞானசக்தி வலது திருவடியாகவும் வணங்கப்படும். மனிதனுடைய உடலின் பாரத்தைப் பாதம் தாங்குவதுபோல், உலக பாரத்தைச் சுமக்கும் சிவனாரை அவரின் பாதங்கள் தாங்குகின்றன. ஐம்பூதங்களும் சிவபிரானிலேயே அடங்குகின்றன. பிருதுவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். ஆகவே, பிரபஞ்சம் என்று அழைக்கப்படும் உலக பாரத்தைத் தாங்குபவர் சிவபெருமான். அவரின் திருவடிகள் அதனால் வணங்கப்படுகின்றன. திருவடிப்பூசை சிறந்த பூசையாக ஞானிகளும் யோகிகளும் கருதிவந்தனர்.

சிலம்பு - பெண்களால் அணியப்படும் காலணி மாதுமை அம்பாள் அணிந்திருக்கும் சிலம்பில் இருந்து வேதவாக்கியங்களின் ஒலிகள் பிறக்கின்றன என்பது சான்றோர் கொள்கை.

நின்மலர் - மலமற்றவர்

"மாயைதான் மலத்தைப் பற்றி வருவதோர் வடிவமாகும்
ஆயவா ணவ மகன்ற வறிவொடு தொழிலை யார்க்கும்
நாயக னெல்லா ஞானத் தொழின்முத னண்ண லாலே
காயமோ மாயை யன்று காண்பது சத்தி தன்னால்"

(ஆயவா ணவம கன்ற வறிவொடு - ஆய ஆணவம் அகன்ற அறிவொடு, தொழின்முத னண்ணலாலே - தொழில் முதல் நண்ணலாலே)

சிவஞானசித்தியார்

பொழிப்புரை

மாயாகாரிய வடிவங்களுக்குக் காரணம் ஆணவமலம். சிற்றறிவுடைய உயிர்களுக்கே இது பொருந்தும். முதல்வன், நின்மலன், எண்குணத்தான், முற்றறிவுடையவன், ஆணவமலத்தின் காரியமன்று முதல்வன் சக்திவடிவமான காரியமே அவன் தோற்றம். அருவம், உருவம், அருவுருவம். கடைசி இரண்டும் தடத்தவடிவங்களே. ஆன்மாக்களுக்கு அருள்புரிவதற்காக இவ்வடிவங்களை அவர் எடுக்கின்றார். அவரின் உண்மை வடிவம் சொரூபம். இயற்கையாக உள்ள தோற்றம். இது ஆன்மாக்களின் ஊனக்கண்ணுக்கு அகப்படாது.

"பந்தமும் வீடுமாய பதபதார்த்தங்க ளல்லான்
அந்தமு மாதி யில்லா னளப்பில னாத லாலே
எந்தைதா னின்ன னென்று மின்னதா மின்ன தாகி
வந்திடா னென்றுஞ் சொல்ல வழக்கொடு மாற்றமின்றி"

- சிவஞானசித்தியார்

பொழிப்பு

முதல்வன் பிரபஞ்சப் பொருளின் இயல்புடையனல்ல னாதலாலும், தோற்ற நாசங்கள் இலன். ஆதலாலும், நெறிப்பட நிறைந்த ஞானத்தொழில் உடைய நிலைமையாலும், என்றும் ஒரு தன்மையாக நிறைந்த ஞானமும் செயலுமுடைய தன்மையன் ஆதலாலும், வெறுப்போடு விருப்புதல் இல்லான். உண்மை வடிவம் சொரூபம்.

"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே"

- திருமந்திரம்

திருமால் பிரமரது எலும்புக் கூட்டினை மேற்கொண்டானாகி சிவபெருமான் திருமேனியிற் பூசப்பெறும் மெய்க்காப்பாகிய திருநீற்றினை ஒளிகெடாமற்பூசி மகிழ்வாரேயாமாகில் வினைகள் அடியார்களைத் தாக்கா.

"பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசுபாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே

- திருமந்திரம்

பதி என்றும், பாசம் என்றும், பசு என்றும் கூறப்படும் இம்முப்பொருள்களில், பதியைப் போலப் பசுவும், பாசமும் தொன்றுதொட்ட பொருள்களே. பதி அணுகில் பாசம் நிற்கமாட்டாது. ஆன்மாவை உலக பந்தத்தில் ஈடுபடுத்துவது பாசம் (ஆணவம்). பசு குருவின் உபதேசத்தால், பதியை அணுகில் பாசம் ஆன்மாவை விட்டுவிலகும். ஆன்மாவுக்கு இறைபக்தி அதிகரிக்க, பாசம் ஆன்மாவை விட்டுவிலகும். ஆதியிலே ஆன்மா கேவல நிலையில் இருந்த காலத்தில் பாசத்தால் (ஆணவமலம்) மூடப்பட்டிருந்தது.அதனால் ஆன்மா பசு என அழைக்கப்படுகின்றது.

உருவத் திருமேனி இறைவன் எடுப்பன்

"படைப்பாதித் தொழிலும் பத்தர்க் கருளும் பாவனையும் நூலும்
இடப்பாக மாதராளோ டியைந்துயிர்க்கு இன்பம் என்றும்
அடைப்பானா மதுவு முத்தியளித்திடும் யோகம் பாசம்
துடைப்பானாந் தொழிலு மேனி தொடக்கானேற் சொல்லொணாதே

-சித்தியார்

பொழிப்புரை

படைப்பு முதலிய பஞ்சகிருத்தியங்கள் செய்தற் பொருட்டும், பத்தர் தியான பாவனை செய்தற் பொருட்டும், வேதாகமங்களின் பொருளை உணர்த்தும் பொருட்டும், ஆன்மாக்களுக்குப் போகத்தை கொடுத்துப் பாசத்தைக் கெடுத்து முத்தியை அளித்தற்பொருட்டும், முதல்வன் உருவத் திருமேனி கொள்ள வேண்டியது இன்றியமையாதது ஆகும். இதுவே அவரின் தடத்த இலக்கணமாகும்.

சிவபிரான் ஆன்மாக்களை உய்வித்தற் பொருட்டு உருவ, அருவுருவத் திருமேனிகளை எடுப்பார்.

உருவ வழிபாட்டின் உயர்வு

திருமேனி தானே திருவருள் ஆகும்
திருமேனி தானே திருஞானம் ஆகும்
திருமேனி தானே சிவநேயம் ஆகும்
திருமேனி தானே தெளிந்தார்க்குச் சித்தே

-திருமந்திரம்

இறைவனது திருவுருவம் அவனது திருவருள் ஆகும். திருமெய்ஞ்ஞானமும் ஆகும். சிவனாகிய அவனிடம் அன்பை உண்டாக்கும். இந்த உண்மைகளைத் தெரிந்தவர்களுக்குப் பல சித்துக்களும் உண்டாகும்.

சிவனார் திருமேனியின் விளக்கத்தை இந்நூலின் இரண்டாம் பகுதியில் பார்க்க.

திருநீறு பெறப்படும் முறை

"அரசுடன் ஆலத்தி யாகும் அக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தான் பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குலமாமே" -திருமந்திரம்

அரசு, ஆல், அத்தி, சமித்துக்கள் வேள்வித்தீயில் உருவம் மாறி விபூதியாகும். அதேபோல் சிவத்தீயில் நினைப்பவர் உருமாறி ஒளி பெறுவர். வெண்ணீற்றொளி உடலைச் சூழ இருக்க உணர்ந்தவர் உயர்ந்த பிரம குலத்தோர் ஆவர்.

1. கற்பம் - குற்றம் இல்லாத கபில நிறப்பசுவின் சாணத்தில் இருந்து பெறப்படுவது.
2. அநுகற்பம் - காட்டிலும், வயலிலும், காய்ந்து கிடக்கும் சாணத்தில் இருந்து பெறப்படுவது.

இவ்விருவகைச் சாணத்தையும் நெற்பதரில் இட்டுத் தீமூட்டி எரிக்க வருவது திருநீறு - நீரிலே இட்டு வடித்தெடுத்து அதைச் சுத்தமாக்குவது நன்று.

3. உபகற்பம் - காட்டிலே மரங்கள் உரோஞ்சுதலால் ஏற்படும் சாம்பர்.
4. அகற்பம் - மலையிலும், கல்தரைகளிலும் இயற்கையாக விளைந்த சுண்ணாம்புக் கல்லில் பெறப்படுவது.

விபூதியின் பலபெயர்

விபூதி - அழியாத ஞானத்தைக் கொடுக்கும்
திருநீறு - வினைகளை நீறுபடுத்துவது
இரட்சை - தீமையில் இரந்து இரட்சிப்பது
சாரம் - மலமாசை (ஆணவம்) போக்குவது
பசிதம் - அறியாமையை அகற்றி ஞானத்தைக் கொடுப்பது

விபூதியின் பலன்

1. கருநிற விபூதி - வியாதியை உண்டாக்கும்
2. பொன்நிற விபூதி - செல்வத்தை அழிக்கும்

3. புகைநிற விபூதி - ஆயுளைக் குறைக்கும்
4. வெண்ணிற விபூதி - இகபர சுகங்களைக் கொடுக்கும்.

ஊழிக்காலம் என்றழைக்கப்படும் இப் பிரபஞ்சமுடிவில் பிரபஞ்சம் தீப்பற்றி எரியும். எஞ்சிய சாம்பல் மேட்டில் சிவபெருமான் ஒருவரே காணப்படுவார். எல்லாம் நிலையற்றவை என்பதைச் சாம்பர் தெளிவுபடுத்தும்.

விடையர் - இடப்பாகத்தை வாகனமாக உடையவர். மகாவிஷ்ணுமூர்த்தி இடபமாக சிவனைத் தாங்குபவர். தருமதேவதையும் இடமாகச் சிவனைத் தாங்கும்.

"பூதி அணிவது சாதனம் ஆதியில்
காதணி தாம்பிர குண்டலம் கண்டிகை
ஓதி யவர்க்காம் உருத்திர சாதனம்
தீதில் சிவயோகி சாதனம் தேரிலே"

-திருமந்திரம்

தவசிகளுக்குச் சாதனம்: திருநீறு, செம்புத்தோடு, உருத்திராட்சம்.

திருஞானசம்பந்தர் நாயனார் திருநீற்றின் சிறப்பை ஒரு திருப்பதிகம் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

2. தேவாரம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
 அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
 பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
 கொள்ளமும் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
 கோணமா மலை யமர்ந்தாரே

பதவுரை

கடிதென வந்த கரிதனை யுரித்து - வேகமாக ஆவேசத்துடன் வந்த யானையைக் கொன்று அதன் தோலையுரித்து, அவ்வுரி மேற்போர்ப்பவர் - அதன்

தோலைத் தன் திருமேனியில் அணிந்தவர். பிடியன நடையாள் - பெண் யானையை ஒத்த நடையை உடையவள், பெய்வளை மடந்தை - வளையல்களை நெருக்கமாக அணிந்த பெண், பிறைநுதல் அவளொடும் - சந்திரனின் மூன்றாம் நாள் பிறை போன்ற வளைந்த நெற்றியை உடையவளும், உடனாய் - ஆகிய மாதுமை அம்பாள் இடப்பக்கத்திற் கொண்டு, கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்த - பயங்கரமாக ஒலிக்கின்ற கடலினாற் சூழப்பட்ட கொள்ளமும் நித்திலம் சுமந்து - சேற்றையும் முத்துக்களையும் தாங்கி, குடிதனை நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றும் - குடிமக்கள் நெருக்கமாய் வாழுகின்ற, கோணமாமலையமர்ந்தாரே - கோணமாமலையில் வீற்றிருப்பவரே.

பொழிப்புரை

கோபாவேசத்துடன் வந்த யானையின் தோலை உரித்துத் தன்மீது போர்த்து, பெண்யானை அசைவது போன் நடையையும், வளையல்களை அணிந்தவளும், பிறைபோன்ற வளைந்த நெற்றியை உடையவளும் ஆகிய மாதுமையோடு சேர்ந்து, கோணேசப்பெருமான், பயங்கரமாக ஆரவாரிக்கின்ற சேற்றினையும், முத்துக்களையும் கரையிற் சேர்க்கின்றதுமான கடலாற் சூழப்பட்ட குடிசனம் நெருக்கமாய் இருக்கின்ற கோணமாமலையில், எழுந்தருளியிருக்கின்றார்.

விளக்கவுரை

கயாசுரன் என்ற அசுரன் தான் பெற்ற வரத்தின் காரணமாக, வலிமையுடைய யானையின் வடிவத்தையெடுத்து தேவர்களுக்கு ஆக்கிரமிப்புச் செய்தான். சிவபெருமான் அதனைக் கொன்று, தோலை உரித்துத் தன்மீது போர்த்தார். இப்புராண வரலாறு இந்நூலின் இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

பெண்களின் நடை அழகைப் பண்டைக் காலச் சான்றோர் நால்வகைப் படுத்தியுள்ளனர்.

அன்னம்- ஆறுதலானது
பிடி - பெண்யானை - அசைவு
நவ்வி - பெண் மான் - இருபக்கப் பார்வையுடன்
துரகதி - குதிரை நடை - வேகம்

"பெய்வளை மட ந்தை"

பண்டைச் சான்றோர் பெண்களின் பராயத்தையும் வகுத்துள்ளனர்.

| | | வயது |
|---|---|---|
| 1. | பேதை | (8-11வயது வரை) |
| 2. | பொதும்பை | (12-15 வரை) |
| 3. | அரிவை | (16-18 வரை) |
| 4. | தெரிவை | (19-22 வரை) |
| 5. | மங்கை | (23-28 வரை) |
| 6. | மடந்தை | (29-32 வரை) |
| 7. | பேரிளம் பெண் | (33-40 வரை) |
| 8. | முதுமை | (41 -> ) |

குறிப்பாகச் சுட்டினும், பொதுவாகவும் உபயோகிக்கலாம். எனவே "பெய்வளை மடந்தை" பெண் என்ற கருத்தில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

3 பாடல்

"பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடை முடியிடை வைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன்கலந்தவர் மதில் மேல்
தனித்த பேருருவ விழித்தழல் நாகந்
தாங்கிய மேரு வெஞ்சிலையாக்
குனித்தபோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பதவுரை

பனித்திளந் திங்கள் - குளிர்ச்சி பொருந்திய மூன்றாம் பிறைச் சந்திரனையும், பைந்தலை நாகம் - கருணை பொருந்திய பாம்பினையும், படர்சடை முடியிடை வைத்தார் - விரிந்த சடாமுடியில் கொண்டவரும், கனித்திளந்துவர்வாய் - கொவ்வைக் கனிபோன்ற சிவத்த வாயினையுடைய, காரிகை பாகமாக முன்கலந்தவர் - மாதுமை அம்பாளை ஆதியில் சக்தி வடிவாய் இடப்பாகத்தில் கொண்டவரும், மதில்மேல் - பொன், வெள்ளி, இரும்பு கோட்டைகள் மீதில், தனித்த பேருருவ விழித்து - ஒப்பற்ற பெருவடிவங்கொண்டு நெற்றிக்கண்ணால் விழித்தவரும், அழல் - நெருப்பை நுனியாக உடைய அம்பையும், நாகந்தாங்கிய - வாசுகி என்ற பாம்பை நாணாகவும், மேரு வெஞ்சிலையைக் குனித்தபோர் வில்லார் - மகாமேரு மலையை வில்லாக வளைத்தவரும், குரைகடல் சூழ்ந்த

கோணமாமலை யமர்ந்தாரே - ஆரவாரிக்கின்ற கடலாற் சூழப்பட்ட திருக்கோணமலையில் வீற்றிருந்தாரே.

பொழிப்புரை

குளிர் பொருந்திய சந்திரனையும், பாம்பையும் சடாமுடியில் கொண்டவரும், மாதுமையம்பாளை இடப்பாகத்தில் வைத்தவரும், நெற்றிக்கண்ணால் மூன்று கோட்டைகளையும் விழித்துப் பார்த்தவரும், மேருமலையை வில்லாகவும், வாசுகி என்ற பாம்பை நாணாகவும் கொண்டவரும் ஆகிய கோணேசப்பெருமான் கடலாற் சூழப்பட்ட திருகோணமலையில் வீற்றிருக்கின்றார்.

விளக்கவுரை

சந்திரனைச் சடாமுடியில் வைத்ததுவும், பாம்பைச் சடாமுடியில் அணிந்ததுவும், உமாதேவியாரை இடப்பாகத்தில் வைத்ததுவும், இரும்புக் கோட்டையை எரித்ததுவும் இந்நூலின் இரண்டாம் பகுதியில் விளக்கப்பட்டுள்ளன.

முப்புரம் எரித்ததுக்கு திருமூலநாயனார் சித்தாந்த விளக்கம் அளித்துள்ளார்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே"

தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்ற அரக்கர்கள் முறையே, பொன், வெள்ளி, இரும்புக்கோட்டைகள் மூலம் பறந்து திரிந்து தேவர்களுக்குத் துன்பங்களை விளைவித்தனர். சிவபெருமானிடம் தேவர்கள் முறையிட்ட பொழுது சிவனார் கண்ணீர் உகுத்தார். இந்தக் கண்ணீர்த்துளியே உருத்திராட்ச மணி என்பது புராணமரபு.

இப்புராணமரபின்படி சிவபெருமான் தேர்மீது அம்புவில்லுடன் சென்றபொழுதிலும், அவர் அம்பை எய்யவில்லை. புன்சிரிப்பாலே கோட்டைகளை எரித்தார். அதனால் சிவன் "திரிபுரந்தகன்" என்று அழைக்கப்படுவார். முப்புரம் என்பது ஆன்மாக்களின் மும்மலங்கள்.

சந்திரனும், பாம்பும் பகைவர் என்பது புராண மரபு. ஆனால் சிவனார் திருமுடியில் பகை மறைந்துவிட்டது.

மேருமலையை வில்லாக விளைத்தமை சிவபெருமானின் பேராற்றலைக் குறிக்கும். சிவனார் புன்சிரிப்பு, தீயபயன், நல்ல பயன் இரண்டையும் வழங்கும்.

பகீரதன் என்போன் தன் முன்னோர்கள் நரகத்தில் இருப்பதை அறிந்து, அவர்களை மோட்ச உலகத்தில் சேர்ப்பதற்காக, அவர்களின் பாவங்களை ஒழிப்பதற்காகவும், ஆகாய கங்கையைக் கொணர்ந்து அவர்கள் மீது பாயுமாறு செய்யத் தவம் செய்தான். அக்கங்கை வேகமாக வர ஆரம்பித்தது. அதன் வேகத்தை இறைவன் தடுத்து, ஒரு துளியாக்கி முடியில் அதனை வைத்துக் கொண்டார்.

இதுவே அப்பணி செஞ்சடை என்பதன் விளக்கம்.

மும்மலம் எரிப்பு

ஆணவத்தின் காரியமாவன: மோகம், மதம், அராகம், கவலை, தாபம்,வாட்டம், வருத்தம்.

கன்மத்தின் காரியமாவன: நல்வினை, தீவினை

மாயையின் காரியமாவன: தனு(உடல்), கரணம்(ஞானேந்திரியம், கன்மேந்திரியம், அந்தக்கரணம்) புவனம், பிரபஞ்சம், போகப்பொருள்.

இவ்வுண்மையை அறிவு குறைந்தவர்களுக்கு உணர்த்தும் பொருட்டு உருவகக் கதையாக உயர்ந்தோர் அமைத்தனர். இவ்வுருவகக் கதையை உண்மையென நம்புவோர் "மூடர்" என்று கூறியும், "ஆரறிவார்" என்றும் கூறியுள்ளார் திருமூலர்.

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
 பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன் தேவி வேண்டமுன் கொடுத்த
 விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் னரற்றுஞ் செழுங்கடற்றரளம்
 செம்பொனு மிப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் றிரைகள் கரையிடைச் சேர்க்குங்
 கோணமா மலையமர்ந் தாரே

பதவுரை

பழித்திளங் கங்கை - புதிய ஆகாய கங்கையின் வேகத்தை அவமதித்து, அதை ஒருதுளியாக்கி தனது சடாமுடியிலே வைத்தவர், பாங்குடை மதனனைப் பொடியா விழித்திட - அழகிய மன்மதனைச் சாம்பராகும் படி நெற்றிக் கண்ணால் விழித்து, அவன் தேவி வேண்ட முன் கொடுத்து - மன்மதனின் துணைவி இரதி மன்றாடிக்கேட்க, அவனை முன்போல் தோற்றுவித்துக் கொடுத்தவரும், விமலனார் கமலமார் பாதர் மலமற்றவரும், செந்தாமரை மலர் போன்ற அழகிய திருவடிகளை உடையவருமாகிய சிவபெருமான், முன் அரற்றுஞ் செழுங்கடல் தரளமும் - செம்பொனும் இப்பியுஞ் சுமந்து நீண்டு ஆரவாரிக்கின்ற வளம் நிறைந்த கடலினால் தெரிந்து சுமந்துகொண்டு வரப்படும் முத்தும், பொன்னும் இப்பியும், கொழித்து வன்திரைகள் - அள்ளி வீசுகின்ற வலிய திரைகள், கரையிடைச் சேர்க்கும் - கரையிலே சேர்க்கின்ற, கோணமா மலை யமர்ந்தாரே - கோணமாமலையில் வீற்றிருக்கின்றவரே.

பொழிப்புரை

இளமை வாய்ந்த கங்கையைச் சடாமுடியில் வைத்தவரும், மன்மதனை எரித்துப் பின்பு புத்துயிர் கொடுத்தவரும், மலமற்றவரும், செந்தாமரை மலர் போன்ற இணைத் திருவடிதனை உடையவரும், முத்தும் பொன்னும் சிப்பியும் அள்ளி வீசுகின்ற கடற்கரையை உடையவரும், கோணமாமலையில் இருந்து அருள்புரியும் கோணேசப்பெருமான்.

விளக்கவுரை

கங்கையைச் சடாமுடியில் வைத்த புராண வரலாறும், மன்மதனைச் சாம்பராக்கிய புராண வரலாறும் இந்நூலின் இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ளன.

உலகத்து மக்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான நீர் கங்கை நதியாகி அதன் கிளைகள் எங்கும் பரவுகின்றன. காம விகாரம் கடந்தவரை சிவன் அழிப்பார் என்பதற்கு அடையாளமாக மன்மதனை எரித்தார். சிவன் கருணாமூர்த்தி, தன்னையடைந்து தன் பாவங்களை மன்னிக்குமாறு கோருகின்றவருக்குத் திருவருள் பொழிவார் என்பதற்கு அடையாளமாக, இரதி வேண்ட மன்மதனை உயிர்ப்பித்தார்.

முதல்வன் முத்தொழில் செய்தல் பற்றி

"தோற்றுவித் தளித்துப்பின்னுந் துடைத்தரு தொழில்கள் மூன்றும்
போற்றவே யுடைய ஈசன் புகுந்தது விகார மென்னிற்
சாற்றிய கதிரோ னிற்கத் தாமரை மலருங் காந்தங்
காற்றிடுங் கனலை நீருங் கரந்திடும் காசினிக்கே"

- சிவஞான சித்தியார்

பொழிப்புரை

சூரியனது சந்நிதானத்திற் சூரிய காந்தக் கல்லில் இருந்து நெருப்புத் தோன்றலும், தாமரை மலர்தலும், நீர்வற்றலும், ஆகிய முத்தொழில் நடைபெறினும் அவற்றால் சூரியன் விகாரமெய்தாது நிற்றல் போல, முதல்வனது சந்நிதானத்திலே தோற்றம் நிலை இறுதி என்னும் முத்தொழிலும் நடைபெறினும் அவற்றால் முதல்வன் விகாரம் எய்தாது நிற்பான்.

தேவாரம் 5

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பதவுரை

தாயினும் நல்ல தலைவர் என்று - ஈன்ற தாயினும் மேலான அன்புள்ள தலைவர் என்று, அடியார் தம்மடி போற்றிசைப்பார்கள் - சிவபெருமானின் அடிமையாகத் தன்னைக் கருதுபவர், சிவபெருமானின் அடிமையாகத் தம்மைக் கருதி அவரின் திருவடிகளை வணங்கிப் புகழ்ந்து பாடுவார்கள், வாயினும் மனத்தும் மருவிநின்றகலா மாண்பினர் - அவரை வாயாலும் மனத்தாலும் புகழ்ந்து கூறும் பண்புடையவர்கள், காண்பல வேடர் - காணும் படியாகப் பல வேடங்களை எடுப்பவர், நோயிலும் பிணியும் தொழிலர் பால் நீக்கி - உடல் நோயையும் ஆன்ம நோயையும் சிவதொண்டு செய்வோரிடம் இருந்து நீக்கி, நுழைதரு நூலினர்

ஞாலம் - நுட்பமான ஞானநூலறிவுடைய மக்கள் வாழும் இப்பகுதியில், கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த - கோயிலாலும், நீரூற்றாலும்,கடலாலும் சூழப்பட்ட, கோணமா மலை யமர்ந்தாரே - கோணமாமலையில் இருந்து திருவருள் பொழிபவரே.

பொழிப்புரை

மேலான அன்புடையவர் என்று சிவனடியார்களால் போற்றப்படுபவரும், சிவோகம் பாவனையில் ஈடுபடும் அடியார்களால் காண்பதற்காகப் பல்வேறு தோற்றங்களை எடுப்பவரும், அவர்களின் உடல்நோய் ஆன்மநோய் தீர்ப்பவரும், ஞானநூலறிவுடைய மக்கள் வாழும் பகுதியில் கோயிலும் நீரூற்றுக்களும் கொண்ட கடலினாற் சூழப்பட்ட கோணமாமலையில் அருள்புரிகின்றவரும் சிவபெருமானே.

விளக்கவுரை

"அம்மையே அப்பா" என்று தாயின் அன்பை வியந்தார் மணிவாசகர். "சிவோகம் பாவனை" என்றழைக்கப்படும் இடைவிடாத சிவசிந்தனையில் இருப்பவருக்குக் காட்சி கொடுப்பார். "நுளைதரு நூலினர் ஞாலம்" என்பது சிவோகம் பாவனையில் இருப்போரின் வேதாகமங்களை நுட்பமாக அறிந்தவர் வாழும் சமூகத்தைக் குறிக்கும்.

"தாயிற் சிறந்த தயாவான தத்துவனே"

-சிவபுராணம்

"பால் நினைந்தூட்டும் தாயினும் சால"

-பிடித்த பத்து

பிணி - ஆன்மநோய் மும்மலப்பிணி - ஆணவம், கன்மம், மாயை

"தீயினும் வெய்யன் புனலினும் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியின் நல்அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ் சடையோனே"

-திருமந்திரம்

தேவாரம் 6

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வரும் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவர்க்கு அருளும்

செம்மையார் நம்மை ஆளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கை வண்செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில் சூழ்
கோணமா மலை யமர்ந்தாரே

பதவுரை

பரிந்து நன் மனத்தால் வழிபடும் - பக்திப் பெருக்கினைக் கொண்ட தூய்மையான சிந்தனையுள்ள மனத்தையுடைய, மாணிதன் - உத்தம பிரமச்சாரியான மார்க்கண்டேயரின், மேல்வரும் கூற்றை - அவருயிரைக் கவரவரும் இயமனை, அவ்வுயிர் திரிந்திடா வண்ணம் - அவ்வுயிர் பிரியாத வண்ணம், உதைத்தவர்க்கருளும் - தனது திருப்பாதத்தாலே உதைத்து மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த, செம்மையார் நம்மையாளுடையார் - சிறப்புடையவரும் எம்மை ஆட்கொள்ளுபவருமாகிய, விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கை வண்செருந்தி செண்பகத்தின் குருந்தொடு முல்லை கொடிவிடும் - பரந்து கிளைகளை விட்டு உயர்ந்த மல்லிகை, குருக்கத்தி, புன்னை, வேங்கை, வளமுடைய செருந்தியும், செண்பகம், குருந்திமரம் கொடிவிட்டு வளரும் முல்லை, பொழில் சூழ் கோணமா மலையமர்ந்தாரே - நிறைந்த சோலைகளால் சூழப்பட்ட திருமலையில் வீற்றிருந்து அருள்புரியும் கோணேசப் பெருமானே.

பொழிப்புரை

இரந்து அன்புடன் வணங்கும் பிரம்மசாரியாகிய மார்க்கண்டேயரின் உயிரைக் கவராவண்ணம் இயமனுக்குக் காலால் உதைத்து, அடியானைக் காப்பாற்றிய வரும், எம்மை ஆட்கொண்டவரும், பூஞ்சோலைகள் நிறைந்த திருகோண மலையில் வீற்றிருக்கும் கோணேசப்பெருமானே.

விளக்கவுரை

சதாநேரமும் சிவன் ஒருவரையே நம்பி அவரை வணங்கும் அடியார்களின் சிறப்பையும் உத்தம பிரமச்சாரியின் சிறப்பையும் இங்கே கூறியுள்ளார்.
மார்க்கண்டேயர் வரலாறு 2ம் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

7. ஏழாவது தோத்திரம் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு ஓலை வடிவத்தில் இருந்தபொழுது தவறிவிட்டது.

தேவாரம் 8

"எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்
ஏத்திட ஆத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வம் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருள் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும் புகழாளர்
கோணமா மலை யமர்ந்தாரே

பதவுரை

எடுத்தவன் - இறைவன் உறையும் கைலாய மலையைத் தூக்கிச் செல்ல முயற்சித்த இராவணனின், தருக்கை இழித்தவர் விரலால் - செருக்கைத் தனது காற் பெருவிரலால் ஊன்றி அடக்கியவர், ஏத்திட ஆத்தமாம் பேறு - பின்பு இராவணன் இரங்கித் துதிக்க அவனுக்கு இஷ்டமான வரத்தை, கொடுத்தவர் செல்வம் - செல்வத்தைக் கொடுத்தவர், தோன்றிய பிறப்பு இறப்பு அறியாதவர் - ஆதியும் அந்தமும் இல்லாதவர், வேள்வி தடுத்தவர் - தன்னைப் புறக்கணித்துத் தக்கனால் மேற்கொண்ட வேள்வியை தடுத்தவர், வனப்பால வைத்ததோர் கருணை - அவனுடைய பக்தியின் சிறப்பால் அவன்மீது கொண்ட கருணையினால், தன்னருள் பெருமையும் வாழ்வும் கொடுத்தவர் - தனது திருவருளினால் அவனுக்குச் சிறப்பும் நீண்ட வாழ்நாளும் கொடுத்தவர், விரும்பும் பெரும்புகழாளர் - எல்லோராலும் விரும்பும் கீர்த்தி உடையவர், கோணமா மலையில் அமர்ந்தாரே - கோணமாமலையில் திருவருள் புரிபவரே.

விளக்கவுரை

இராவணன் வரலாறு இந்நூலின் இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரருளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே -திருமந்திரம்

சிவபெருமான் பிறப்பு இறப்பு அற்றவன், அருளாளன், அன்பர்களை விட்டு நீங்காதவன், தொழுவோரை மறக்கமாட்டான்

தேவாரம் 9

"அருவரா தொருகை வெண்டலை ஏந்தி
அகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையு நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள்ளெரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந்தாரே

பதவுரை

அருவரா தொருகை வெண்தலை ஏந்தி - அருவருப்பு இல்லாமல் வெண்ணிறமுள்ள மண்டை ஓட்டை ஒரு கையில் ஏந்தி; அகந்தொறும் பலியுடன் புக்க - வீடுகள் தோறும் பிச்சை ஏற்பதற்காகச் செல்வர்; பெருவரா உறையும் நீர்மையர் - பெருங்குணத்தை உடையவரும், சீர்மைப் பெருங்கடல் வண்ணனும் பிரமன் இருவரும் - சிறப்புடைய திருப்பாற் சமுத்திரத்தில் பள்ளிகொள்ளும், மகா விஷ்ணுமூர்த்தியும் பிரமனும் ஆகிய இருவரும், அறியா வண்ணம் ஒள் ளரியாய் உயர்ந்தவர் - இருவரும் அறியாத வண்ணம் சோதிப் பிழம்பாகி மேலாக உயர்ந்து நின்றவரும், பெயர்ந்த நன்மாற்கும் குருவராய் நின்றவர் - உலகளந்த நல்ல திருமாலுக்கும் குருவராய் விளங்கியவரும், குரைகழல் வணங்க - வீரக்கழல் அணிந்த இறைவனுடைய திருவடிகளை வணங்கவும், கோணமா மலையமர்ந் தாரே - திருக்கோணமலையில் இருந்து அருள்புரிபவரே.

பொழிப்புரை

பிச்சைப் பாத்திரத்தை ஏந்திய வண்ணம் வீடுகள் தோறும் சென்று பிச்சை ஏற்கும் பெருங்குணம் படைத்தவரும், மகாவிஷ்ணுமூர்த்தியும் பிரம்மனும் அறியாத வண்ணம் தீப்பிழம்பாகத் தோன்றியவரும், பின்பு அவர்களுக்குக் குருவாய் அமர்ந்தவரும் கோணேஸ்வர மூர்த்தியே

விளக்கவுரை

பிரம்மச்சாரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு படிகளில் உள்ளவருள் சந்நியாசிகள் பிச்சைப்பாத்திரம் ஏந்தி உண்பவர்கள். இதற்கு முன்னுதாரணமாக சிவன் தாருகாவனத்தில் பிச்சைப்பாத்திரம் ஏந்திச்சென்ற புராண பாரம்பரியம் இந்நூலின் இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ளது.

வெண்தலை என்பது பிரம்ம கபாலம். உலகம் ஒடுங்குகின்ற காலத்தில், பிரபஞ்சம் எரிந்து சாம்பலாகிவிடும். சிவன் ஒருவரே அச்சாம்பல் மேட்டில் எஞ்சி நிற்பவர். பிரமன் விஷ்ணு உட்பட ஏனையோர் சாம்பராகி விடுவர். இவ்வாறு பலமுறை உலகம் ஒடுங்கிய பொழுதில், இறந்த பிரமா, விஷ்ணுக்களின் எலும்பையும் மண்டை ஓட்டையும் தாங்கி நிற்பவர். சிவன் ஒருவரே நித்தியர், ஏனையோர் அநித்தியர் என்பதை விளக்க மண்டை ஓடுகளையும் எலும்புக் கோவைகளையும் சிவன் தாங்குகின்றார்.

இதனாற் சிவன் "கங்காளன்" என்று அழைக்கப்பட்டார்.

"இருவரும் அறியாவண்ணம் ஒள் எரியாய்" என்ற புராண பாரம்பரியம் இந்நூலின் இரண்டாம் பகுதியில் கூறப்பட்டுள்ளது. இது இலிங்கேஸ்வர மூர்த்தியாக வணங்கப்படுகின்றது.

சிவபெருமான் இருவரையும் மன்னித்து, பழைய பதவியையும் அதிகாரங்களையும் மீண்டும் அளித்தார்.

பரந்துல கேழும் படைத்த பிரானை
இரந்துணி என்பார்கள் எற்றுக் கிரங்கும்
நிரந்தரம் ஆக நினையும் அடியார்
இரந்துண்டு தன்கழல் எட்டச் செய் தானே

-திருமந்திரம்

பொழிப்புரை

தன் திருவடியை அடையச் செய்தவற்காகவே, முன்னோடியாக, பிச்சைப்பாத்திரம் ஏந்தினார்.

தேவாரம் 10

"நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறியல்லாதன புறங்கூற
வென்று நஞ்சுண்ணு பரிசினர் ஒருபால்
மெல்லிய ளோடும் உடனாகித்
துன்று மொண்பௌவ மவ்வலுஞ் சூழ்ந்த
தாழ்ந்துறு திரைபல மோதிக்
குன்றும் ஒண்கானல் வாசம் வந்துலவும்
கோணமா மலையமர்ந் தாரே

பதவுரை

நின்றுணுஞ் சமணும் இருந்துணும் தேரும் - நின்று கொண்டு உணவருந்தும் சமண முனிவரும், இருந்து கொண்டு உணவருந்தும் பௌத்த துறவிகளும், நெறியல்லாதன புறம் கூற - பண்பில்லாத மொழிகளை இழிவாகப் பேசுவர், வென்று - மறுத்ததுரைத்து வென்றவர்களும், நஞ்சு உண்ணும் பரிசினர் தேவர்களைப் பாதுகாக்க நஞ்சு உண்ட சிவபெருமான், ஒருபால் மெல்லியலோடும் உடனாகித் - ஒரு பக்கத்தி'லே மென்மை பொருந்திய உமாதேவியாரை வைத்திருப்பவரும், துன்றும் ஒண் பௌவல் மவ்வலும் சூழ்ந்து - ஒளி பொருந்திய நெருங்கி வளர்ந்த மல்லிகைச் சோலையும் சூழந்து, தாழ்ந்துறு திரைபல மோதி - கீழே கடல் அலைகள் மோதுகின்ற, குன்றும் ஒண் கானல் வாசம் - மலைகளில் உள்ள ஒளிபொருந்திய காட்டுப் பூக்களும் வாசனையும் உடைய, கோணமா மலை யமர்ந்தாரே - திருகோணமலையில் அருள்புரிபவரே.

பொழிப்புரை

சமணரும், பௌத்தரும் இழிவாகக் கூறும் வசனங்களை ஏற்கவேண்டாம். சிவபெருமானும் உமாதேவியாரும் வீற்றிருக்கும் திருமலைக்கு பூக்களும் அலைகளும் வாசனையைக் கொடுக்கின்றன.

விளக்கவுரை

"மெல்லியலோடும் உடனாகித்" சிவம் சத்தியோடு சேர்ந்திருப்பது உலகில் மக்கள் இனம் தொடர்ந்து வாழவேண்டும் என்பதற்காக.

"சத்தியுஞ் சிவமு மாய தன்மையில் வுலக மெல்லாம்
ஒத்தொவ்வா வாணும் பெண்ணும் உயர்குண குணியுமாக
வைத்தன னவளால் வந்த ஆக்கம்இவ் வாழ்க்கையெல்லாம்
இத்தையு மறியார் பீட லிங்கத்தி னியல்புமோரார்

-சித்தியார்

பொழிப்புரை

சத்தி சிவம் என இருதன்மையாயிருத்தலன்றே உலகம் முழுவதும் ஆண்பெண் என இருவகையாயும் குணம் குணிப்பொருள்களாயும் விளங்கவைத்தனன் வாழ்வுகளெல்லாம் சிவசத்தியால் வந்தனவேயாம். சிவமும் சத்தியும் கொண்டருளிய பீடலிங்க வடிவமே அவ்வாறு இருவகையாய இருப்பது சாட்சியமாகும்.

சிவமும் சத்தியும் ஆணும் அல்ல பெண்ணும் அல்ல

"சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ் சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திரு வரும்பு ணர்ந்திங்கு உலகு உயிர் எல்லாம் ஈன்றும்
பவன்பிரம சாரி ஆகும் பான்மொழி கன்னியாகும்
தவந்திரு ஞானத் தோர்க்கித் தன்மைதான் தெரியமன்றே"

-சித்தியார்

பொழிப்புரை

பரமசிவனும் பராசக்தியும் பிரபஞ்சமனைத்தையுந் தோற்றுவித்துப் பஞ்சகிருத்தியங்களும் செய்வரெனினும், அவற்றின் தன்மை சிறிதும் எய்தாது நிற்பர்.

* உவந்திரு வரும்பு ணர்ந்திங்கு
- உவந்து + இருவரும் +புணர்ந்து +இங்கு
பவன் - சிவன்

தேவாரம் 11

குற்றமி லாதார் குரைகடல் சூழ்ந்து
கோணமா மலையமர்ந் தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம் பந்தன்
உற்றசெந் தமிழார் மாலையீ ரைந்தும்
உரைப்பவர் கேட்பவ ருயர்ந்தோர்
சுற்றமு மாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானிடைப் பொலிந்தே"

குற்றமில்லாதார் - பிறப்பு, இறப்பு இல்லார்
வெறுப்பு விருப்பு அற்றவர்
பாசபந்தம் அற்றவர்

கடைசிச் செய்யுள் திருக்கடைக் காப்பு எனப்படும்.

திரு - தெய்வீகம்

கடை - கடைசி, இறுதி

காப்பு - காவல். இப்பதிகத்துக்குப் பூட்டாக அமைந்துள்ளது இறுதிச் செய்யுள்.

பதிகம் - 10 பாடல்களைக் கொண்டது.

முக்கிய குறிப்பு

1. ஞானசம்பந்தர் பாடியவை "திருக்கடைக் காப்பு" என அழைக்கப்படுகின்றன.
2. திருநாவுக்கரசு நாயனார் பாடியவை "தேவாரம்" என அழைக்கப்படுகின்றன.
3. சுந்தரமூர்த்தி நாயனார் பாடியவை "திருப்பாட்டு" என அழைக்கப்படுகின்றன.

திருஞானசம்பந்தர் பாடிய பாடலில் 7வது மறைந்துவிட்டது.

திருஞானசம்பந்தர் சுவாமிகளின் திருப்பாடல்களில் பெரும்பாலானவை சில பொதுத் தன்மை உடையன.

8. இராவணன் சம்பந்தப்படுதல்

9. மகாவிஷ்ணுவும் பிரம்மதேவரும் சம்பந்தப்படுதல்

10. சமணரும் பௌத்தரும் சம்பந்தப்படுதல்

11. திருக்கடைக் காப்பு பதிகத்தின் பலன்

# சிவபெருமான் நஞ்சுண்டமை

தேவர்களும் அசுரர்களும் சாகாமல் வாழ்வதற்கு விரும்பி ஆலோசனை செய்தனர். அமிழ்தம் என்பது சாகா மருந்து. அதனையுண்டால் மரணமிலாப் பெருவாழ்வு பெறலாம் என்பதனை உணர்ந்தனர். அமிழ்தம் திருப்பாற்கடலில் இருந்து பெறப்படவேண்டும். பிரமதேவரிடம் சென்று இவ்வேண்டுகோளை முன்வைத்தனர்.

"ஆதி மாயவற் கிச்செயன் மொழிகுவ மவனே
யோத வேலையைக் கடைந்தமு தளித்திடு முண்டால்
சாதல் வல்லையில் வந்திடா தென்றயன் சாற்றிப்
போது நாமென வவரொடும் பாற்கடல் புகுந்தான்"

திருமாலுக்கு நாம் வேண்டுதலைச் செய்வோம் பாற்கடலைக் கடைந்து அமிழ்தத்தை அளிப்பார் எமக்கு என்று பிரமதேவன் கூறிப் பின்பு எல்லோரும் திருமாலிடம் சென்றனர்.

திருமாலும் அவர்களின் வேண்டுதலுக்கு இசைந்தார். இசைந்து திருப்பாற்கடலைக் கடையவேண்டிய முயற்சி எடுத்தார்.

"அருள் புரிந்தெழு மாயவன் மந்தர மதனை
யுருள்பு ரிந்திடு மத்தென நிறுவியே யுடலாம்
பொருள்பு ரிந்திடு மதியினை மதலையாப் புரியா
விருள்பு ரிந்தவர் சுகிதன்ன நாணென யாத்தான்"

அருள் புரிந்து எழு மாயவன் மந்தரம் அதனை
உருள் புரிந்திடு மத்தென நிறுவியே உடலாம்
பொருள் புரிந்திடு மதியினை மதலையாப் புரியா
இருள் புரிந்த வாசுகிதனை நாண் என யாத்தான்"

பொழிப்புரை

மந்தர மலையை மத்தாகவும், உடல் தேய்ந்து மீண்டும் வளரும் சந்திரனைக் கடை தறியாகச் செய்து, நஞ்சைக் கொண்ட வாசுகி என்ற பாம்பை கடை கயிறாகக் கட்டினார்.

தேவர்கள் ஒருபுறத்திலும், அவுணர்கள் மறு புறத்திலும் நின்று, வாசுகியான கயிற்றை இழுத்தனர். மந்தரம் சுழல ஆரம்பித்தது. அந்த வேளையில்..

"ஈற்றுக் கோடியி னெழுமுகிற் கோடியி னிருண்டு
கூற்றுக் கோடியின் மறங்கொடு திசைதொறுங் குலவுங்
காற்றுக் கோடியின் விரைவினால் வடவையங் கடுந்தீ
நூற்றுக் கோடியிற் பரந்தவ் விடமெலாம் நொய்தீன்"

ஈற்றுக் கோடியின் எழுமுகில் கோடியின் இருண்டு
கூற்றுக் கோடியின் மறம்கொடு திசைதொறும் குலவும்
காற்றுக் கோடியின் விரைவினால் வடவையம் கடும்தீ
நூற்றுக் கோடியிற் பரந்தது அவ் விடமெலாம் நொய்தீன்

பொழிப்புரை

உலக முடிவின்கண் கருநிறம் படைத்துத் திக்குகள் தோறும் சென்று மோதுகின்ற கோடிசண்ட மாருதத்தின் வேகத்தோடு நூறுகோடி வடவா முகாக்கினியைப் போல, அவ்வாலகால விஷம் விரைவில் எங்கும் பரந்தது.

பிரமதேவர், தேவேந்திரன், அசுரேந்திரன் உட்படச் சகலரும் ஓடினார்கள். கயிலாயகிரியை விரைவில் அடைந்தனர். சிவபிரான் அவர்களின் துன்பத்துக்கிரங்கி சுந்தரமூர்த்தியை நோக்கிப் பின்வருமாறு கூறினார்.

அவ்விடத்தை இங்கே கொண்டுவா என்றார். சுந்தரரிடம் விடத்தைப்பெற்று அதனைச் சிறுதுளியாக்கித் தானே உண்டார்.

"என்றனன் விரைவிற் றன்கை யேந்தியே விடமுட் கொள்ளச்
சென்றது மிடற்றி லன்ன திறத்தினை யாரு நோக்கி
யின்றெம துயிர்நீ காத்தற் கிங்கிது சான்றா யங்க
ணின்றிட வருடி யென்றே நிமலனைப் போற்ற லுற்றார்"

என்றனன் விரைவில் தன்கை ஏந்தியே விடம் உட்கொள்ளச்
சென்றது மிடற்றில் அன்ன திறத்தினை யாருநோக்கி
இன்று எமது உயிர்நீ காத்தற்கு இங்கிது சான்றாய் அங்கண்
நின்றிட அருள்தி என்றே நிமலனைப் போற்ற லுற்றார்.

பொழிப்பு

சிவபிரான் தனது திருக்கையில் உள்ள விடத்தை உண்டார். அந்நஞ்சு மிடற்றிலே நின்றது. அதனால் கண்டங்கறுத்தது. எங்கள் உயிரைப் பாதுகாத்தற்கு இது சான்றாகும்.

மேலும் சிவன் கூறினார், "நீங்கள் சென்று திருப்பாற் கடலைக் கடையுங்கள்" என்று மூலம் : ததீசி உத்தர படலம் 320-351

## மால் நந்தி (மால் விடை)

9ம் திருப்பாடலில் "பெயர்ந்த நன் மாற்கும் குருவாய் நின்றார்" என்ற தொடர் ஒரு புராண பாரம்பரியத்தை விளக்கும். திருமால் தன் தவறை உணர்ந்தார். இதன் காரணமாக சிவன் குருவாக அமைந்தார். சிவன் கோவில்களில் 7 நந்திகள் அமைத்தல் மரபு அவற்றுள் ஒன்று திருமால், நந்தி வடிவமாகச் சிவனைத் தாங்கியதாகும். இந்நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தவே "மால் நந்தி" என்ற திருவுருவம் அமைக்கப்படும். இத்தோற்றம் எழுந்தருளியாகப் பயன்படுத்தப்படும்.

# சிவபிரானுக்கு நெற்றிக்கண் தோன்றியமை

சிவபிரானுடைய கண்கள் இரண்டையும் உமாதேவியார் தனது கைகளால் பொத்தினார்.

"திங்களின் கதிரு மேனைத் தினகரன் வெயிலுந் தீயின்
பொங்குசெஞ் சுடரு மேனைப் புலவர்தங் கதிரு மற்று
மெங்குள வொளியு மாய்வுற் றிருணிறம் படைத்த மாதோ
சங்கரன் விழியா லெல்லாச் சோதியுந் தழைத்த நீரால்"

திங்களின் கதிரும் ஏனைத் தினகரன் வெயிலும் தீயின்
பொங்கு செம் சுடரும் ஏனைப் புலவர்தம் கதிரும் மற்றும்
எங்குள ஒளியும் மாய்வுற்று இருள்நிறம் படைத்த மாதோ
சங்கரன் விழியால் எல்லாச் சோதியும் தழைத்த நீரால்

பொழிப்பு

கண்களைப் பொத்தியதும், சந்திரஒளியும், சூரியன் ஒளியும், அக்கினியின் சுடரும், தேவர்கள் தேக காந்தியும், வேறு ஒளிகளும் மறைந்தன. சிவபெருமானுடைய திருக்கண்கள் ஒளியினாலே எல்லாச் சோதிகளும் விருத்தியடைந்தன.

"ஓங்குதன் னுதலி னாப்ப ணொருதனி நாட்ட நல்கி
யாங்கது கொண்டு நாத கருள்கொடு நோக்கி யாண்டு
நீங்கரு நிலைமைத் தாகி நின்றபே ரிருளை மாற்றித்
தீங்கதிர் முதலா னோர்க்குச் சிறந்தபே ரொளியை யீந்தான்"

ஓங்குதன் நுதலின் நாப்பண் ஒருதனி நாட்டம் நல்கி
ஆங்கது கொண்டு நாதன் அருள்கொடு நோக்கி யாண்டும்
நீங்கரு நிலைமைத் தாகி நின்றபேர் இருளை மாற்றித்
தீங்கதிர் முதலானோர்க்குச் சிறந்தபேர் ஒளியை ஈந்தான்

பொழிப்பு

நெற்றிக்கண்ணைத் திறந்து, திருவருள் நோக்குடன், பெரிய இருளை நீக்கினான் பெரிய ஒளியைக் கொடுத்தவன்.

தத/சி உத்தரபடலம் - 364-367

# கங்கை தோன்றிய வரலாறு

"சங்கரன் விழிகள் மூடுந் தனாதுகை திறக்கு மெல்லை
யங்குலி யவையீரைந்து மச்சத்தால் வியர்ப்புத் தோன்ற
மங்கையைத் தகைமை காணூஉ மற்றவை விதிர்ப்பப் போந்து
கங்கையோர் பத்தா யாண்டுங் கடல்களிற் செறிந்த வன்றே

சங்கரன் வழிகண் மூடும் தனாதுகை திறக்கும் எல்லை
அங்குலி அவை ஈரைந்து மச்சத்தால் வியர்ப்புத் தோன்ற
மங்கையைத் தகைமை காணூஉ மற்றவை வியர்ப்புப் போந்து
கங்கையோர் பத்தாய் யாண்டுங் கடல்களிற் செறிந்தே அன்றே

பொழிப்புரை

சிவபிரானுடைய கண்களை மூடிய கையை உமாதேவியார் எடுக்கும்பொழுது ஒவ்வொரு விரலிலும் இரண்டு வியர்வை தோன்றின. அதனால் பத்து நீரோடைகள் ஊற்றெடுத்தன. அவை கடலிற் சென்று சேர்ந்தன.

அப்பொழுது நீர்ப்பெருக்கம் உலகை அழிக்கும் நிலையை எய்தியது. இந்நிலைமைக்குப் பயந்து பிரமாவும், விஷ்ணுவும், இந்திரனும் சிவனிடம் முறையிட்டனர்.

"என்றலு நதிக டோற்ற மியம்பியெவ் வுலகுஞ் சூழ்போய்
நின்றவந் தீத்தந் தன்னை நினைத்தவ ணழைத்து நாத
னொன்றுதன் வேணி மேலோ ருரோமத்தி னும்பருய்ப்ப
மன்றலங் கமலத் தோனு மாலுமிந் திரனுஞ் சொல்வார்"

என்றலு நதிகள் தோற்றம் இயம்பி எவ்வுலகுஞ் சூழ்போய்
நின்ற அந்தீத்தம் தன்னை நினைத்த அவண் அழைத்த நாத
ஒன்று தன் வேணிமேல் ஓர் உரோமத்தின் உம்பர் உய்ப்ப
மன்றலங் கமலத்தோனும் மாலும் இந்திரனுஞ் சொல்வார்

பொழிப்புரை

அத்தீத்தந்தன்னை அங்கே அழைத்து தனது சடாமுடியின்மேல் ஒரு உரோமத்தில் அடக்க பிரமனும், விஷ்ணுவும் இந்திரனும் பின்வருமாறு

சொல்வர்.

பின்பு சிவபெருமான் அவர்கள் ஒவ்வொருவருக்கும் சிறிது கங்காநதியின் தீர்த்தத்தைக் கொடுத்தார்.

"அந்நதி மூன்று தன்னி லயனகர் புகுந்த கங்கை
பன்னருந் திறலின் மிக்க பகீரதன் றவந்தான் மீளப்
பின்னரு மிமையா முக்கட் பெருந்தகை முடிமேற் றாங்கி
யிந்நில வரைப்பிற் செல்ல விறையதில் விடுத்தல் செய்தான்"

அந்நதிமூன்று தன்னில் அயன் நகர்புகுந்த கங்கை
பன்னருந் திறலின் மிக்க பகீரதன் தவத்தால் மீளப்
பின்னரும் இமையாமுக்கண் பெருந்தகை முடிமேற் தாங்கி
யிந்நில வரைப்பிற் செல்லஇறை அதில் விடுத்தல் செய்தான்.

பொழிப்புரை

அம்மூவகைக் கங்கையுள், பிரமதேவரின் நகரத்தை அடைந்த கங்கை, பகீரதனுடைய தவவிசேடத்தால் பூமிக்கும் மீண்டும்வர, சிவபெருமான் பின்னரும் முடிமீது ஏற்றி, அதில் சிறியதை இந்நிலவுலகத்தில் செல்லுமாறு விடுத்தார்.

ததீசி உத்தரபடலம் 369-378

# சிவபெருமான் முத்தொழில் செய்தல்

"நிலவு கின்றதன் னருளுருக் கொண்டிடு நிமலன்
றலைமை பெற்றிடு புங்கவர் தம்மைமுன் றந்தே
யுலகம் யாவையு மளித்தருள் செய்திட வுவதி
யலகி லாவுயிர் யாவையு மயன்கணின் றளிப்பான்"

நிலவுகின்ற தன் அருள்உருக் கொண்டிடு நிமலன்
தலைமை பெற்றிடு புங்கவர்தம்மை முன் தந்தே
உலகம் யாவையும் அளித்தருள் செய்திட உதவி
அலகிலா உயிர் யாவையும் அயன்கண் நின்று அளிப்பான்

பொழிப்புரை

தலைமை தாங்கிய தேவர்களான பிரமா விட்டுணுக்களைப் படைத்து அதிகாரங்களையும் வழங்கினார். உயிர்களைப் படைத்துக் காப்பதற்கு

"அன்ன வேலையி லவையெலா மழிந்தபின் னளிப்போ
ரென்ன நின்றவர் தம்மையு மொடுக்குறு மிதற்பின்
முன்ன ருள்ளதோ ரேகமா யுறையுமெம் மூர்த்தி
பின்னு மிம்முறை புரிந்திடு மென்றுமிப் பெற்றி"

அன்ன வேலையில் அவையெலாம் அளித்தபின் அளிப்போர்
என்ன நின்றவர் தம்மையும் ஒடுக்குறும் இதற்பின்
முன்னர் உள்ளதோர் ஏகமாய் உறையும் எம்மூர்த்தி
பின்னும் இம்முறை புரிந்திடும் என்றும் இப்பெற்றி

பொழிப்புரை

சங்கார காலத்தில் அவையெலாம் அழிந்தபின், பிரமா விட்டுணுக்களையும் ஒடுக்குவர், அதன்பின் சிவம் ஏகப்பொருளாய் இருப்பர். இவ்வாறே எஞ்ஞான்றும் பஞ்சகிருத்தியச் செயலை மீண்டும் மீண்டும் செய்வர்.

இவ்வாறு செய்தலினால் தான் ஒருவரே நித்தியர் என்பதை நிரூபிக்க, பிரமா முதலியோரின் எலும்புகளையும் தலை ஓட்டையும் அணிவார்.

"சிரம் எலாம் தொடுத்து அணியலா அணிந்திடும் சிகைதன்
உரம் உலாவு முந்நூல் என அணிந்து உறையும்"

அவர்களுடைய சிகைகளை மார்பிற் பொருந்திய பூணூலாக அணிந்துள்ளார்.
ததீசி உத்தரபடலம் 9 - 14

## எல்லாமாய் இருப்பவன் சிவனே

"தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்
தானே சுடும்அங்கி ஞாயிறு திங்களும்
தானே மழைபொழி தையலும் ஆய்நிற்கும்
தானே தடவரை தண்கடல் ஆமே"

அங்கி - நெருப்பு, தடவரை - பெரியமலை

"புவனம் படைப்பான் ஒருவன் ஒருத்தி
புவனம் படைப்பார்க்குப் புத்திரர் ஐவர்
புவனம் படைப்பானும் பூமிசை யானாய்
புவனம் படைப்பான்அப் புண்ணியன் தானே"

உலகம் படைப்பவர் சிவனும் சத்தியும் (ஒருத்தி), புத்திரர் ஐவர் பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன்
திருமந்திரம் - மூலம்

## பன்றியின் கொம்பை அணிந்த வரலாறு

"விண்ணு ளோர்க்கெலா மல்லலே வைகலும் விளைந்து
நண்ணு மாடகக் கண்ணினன் முன்னமோர் நாளின்
மண்ண கந்தனை வௌவியே வயிற்றிடை வைத்துத்
துண்ணெ னப்பிலம் புக்கன னுயிரெலாந் துளங்க"

விண்ணு ளோர்க்கு எலாம் அல்லலே வைகலும் விளைந்து
நண்ணும் ஆடகக் கண்ணினன் முன்னம் ஓர்நாளில்
மண்ணகம் தனை வௌவி வயிற்றிடை வைத்து
துண்ணெனப் பிலம்புக்கனன் உயிரெலாம் துளங்க

பொழிப்புரை

தேவர்களுக்கு துன்பத்தினைச் செய்து கொண்டிருந்த இரணியாக்கன் என்பவன் பூமியைக் கவர்ந்து வயிற்றினுள் அடக்கிக் கொண்டு உயிர்கள் அனைத்தும் நடுங்கும்படி பாதாள உலகிற் புகுந்தான்.

இரணியாக்கன் என்பவன் இரணியனின் தமையன்

மகாவிஷ்ணுமூர்த்தி பன்றி உரு எடுத்து மேருமலையை ஒப்ப வளர்ந்து ஆரவாரம் செய்தது.

"ஓரி மைக்குமுன் பாதலந் தன்னின்மா லுற்றுக்
கூரெ யிற்றினாற் பாய்ந்துபொற் கண்ணனைக் கொன்று
பாரி னைக்கொடு மீண்டுமுன் போலவே பதித்து
வீர முற்றனன் றன்னையே மதித்தனன் மிகவும்"

ஓர் இமைக்கு முன் பாதலம் தன்னின் மால் உற்றுக்
கூர் எயிற்றினால் பாய்ந்து பொற்கண்ணனைக் கொன்று
பாரி னைக்கொடு மீண்டும் முன்போலவே பதித்து
வீர முற்றனன் தன்னையே மதித்தனன் மிகவும்"

பொழிப்புரை

கண்ணிமைக்குமுன் மகாவிஷ்ணுமூர்த்தி மிகப் பெரிய பன்றி உருவெடுத்து பாதலம் சென்று இரணியாக்கனைக் கொன்று பூமியைக் கொண்டுவந்து முன்இருந்தபடி அமைத்து. அச்செயலினால் கர்வங்கொண்டான்.

பின்பு தன்னுடைய வீரத்தை வெளிப்படுத்துவதற்காகப் பூமியைப் பிளந்தும், சமுத்திரத்தினை நிலைகுலையவும் செய்தான். சிவபெருமான் அவ்விடத்துக்குச் சென்றார்.

"கண்டு கண்ணுத லவன்மருப் பொன்றினைக் கரத்தாற்
கொண்டு வல்லையிற் பறித்தலு முணர்வுமுன் குறுக
விண்டு மற்றதும் பறிப்பனிங் கிவனென வெருவிப்
பண்டு போலநின் றேத்தலும் போயினன் பரமன்"

கண்டு கண்ணுதலால் அவன் மருப்பு ஒன்றினைக் கரத்தால்
கொண்டு வல்லையில் பறித்தலும் உணர்வுமுன் குறுக
விண்டு மற்றதும் பறிப்பன் இங்கு சிவன்என வெருவிப்
பண்டு போலநின்று ஏத்தலும் போயினன் பரமன்

பொழிப்புரை

சிவன் பன்றியின் கொம்பொன்றைப் பறித்தான். மற்றதும் பறிப்பான் என்றும், பழைய உணர்வு பெற்று, முன்போல் இறைவனை ஏத்தலும், இறைவன் மறைந்தருளினான். ஆணவத்தின் தீமை அடக்கப்பட்டது.

ததீசி உத்தரபடலம்:15-21

# யானைத் தோல் உரித்த வரலாறு

யானையின் உருவத்தை உடைய கொடிய கயாசுரன் என்பவன் மேரு மலையிலே, போய் பிரமாவைப் போற்றி அருந்தவம் பல செய்தான். பிரமதேவர் அவன்முன் தோன்றினார். அழிவில்லாத நீண்ட ஆயுளும் வலிமையும் வெற்றியும் தரும்படி கேட்டான் கயாமுகாசுரன். பிரமா பின்வருமாறு கூறினார்.

"இந்து வண்ணநீ வேண்டிய தளித்தன மிகலி
லந்தி வண்ணனோர் சென்றிடல் சேறியே லந்நாட்
சிந்து மிவ்வரங் கடைப்பிடி யீதெனச் செப்பி
யுந்தி வந்தவன் போயினன் றனதுபே ருலகில்"

இந்த வண்ணம் நீ வேண்டியது அளித்தனம் இகல் இல்
அந்தி வண்ணன் நேர் சென்றிடல் சேறியேல் அந்நாள்
சிந்தும் இவ்வரம் கடைப்பிடி ஈதெனச் செப்பி
உந்தி வந்தவன் போயினன் தனது பேருலகில்

பிரமதேவர் அவன் கேட்ட வரங்களைக் கொடுத்துப் பின்னும் கூறினார் "சிவபெருான் முன் நீ சென்றால் இந்த வரங்கள் அழியும்" என்று சிவபெருமான் ஒருவரைவிட ஏனையோர் மீது போர்தொடுப்பேன் என்று கூறி உலக உயிரினங்கள் அனைத்துக்கும் துன்பங்கொடுத்தான். முனிவர்கள் இவனுக்குப் பயந்து காசியை அடைந்து மணிகர்ணிகை என்னும் ஆலயத்துள் புகுந்து விசுவநாதர் முன் முறையிட்டனர்.

"வெய்ய தந்தியாய் வந்தொரு தானவன் விரைவில்
வைய கத்தையட் டெம்மையுங் கொல்லிய வருவா
னைய நின்னதா ளரணமென் றடைந்தன மடியே
முய்ய வேயருள் புரியெனப் போற்றியே யுறலும்"

வெய்ய தந்தியாய் வந்து ஒரு தானவன் விரைவில்
வைய கத்தை அட்டு எம்மையும் கொல்லிய வருவான்
ஐய நின்னதாள் அரணம் என்று அடைந்தனம் அடியே
உய்யவே அருள்புரி எனப்போற்றியே உறலும்

பொழிப்புரை

யானை வடிவுடைய அசுரன் உலகத்தை அழிக்கின்றான், எம்மையும் கொல்லவருகின்றான், தேவரீர் காத்தருளவேண்டும் என்று கூறினர்.

இறைவன் மிகப்பெரிய வடிவங்கொண்டு, அவனை உதைத்தனர். அவன் வீழ்ந்தான்.

"ஒருப த்தினைக் கவானுறுத் திருகரத் துகிரா்ல
வெரிநி டைப்பிளந் தீரிரு தாள்புடை மேவக
குருதி கக்கியே ஓலிட வவுணர்தங் குலத்துக்
கரியு ரித்தனன் கண்டுநின் றம்மையுங் கலங்க"

ஒரு பதத்தினைக் கவான் உறுத்து இருகரத்து உகிரால்
வெரிந் இடை பிளந்து ஈரஉடுதாள் புடைமேவ
குருதி கக்கியே ஓலிட அவுணர்தங் குலத்துக்
கரி உரித்தனன் கண்டு நின்று அம்மையும் கலங்க

பொழிப்புரை

தனது ஒரு திருவடியைத் தனது தொடையில் உறுத்திக்கொண்டு தனது நகங்களால் கயாசுரன் முதுகைப் பிளந்து குருதிகக்க, உமாதேவியுங்கண்டு பயப்படத் தோலை உரித்தார்.

ததீசி உத்தரப்படலம் - 128-149

# தாருகாவனத்து முனிவர்களும் சிவனும்

தாருகாவனத்தில் நாற்பத்தொன்பதினாயிரம் முனிவர்கள் யாகங்களைச் செய்துகொண்டு சிவனை மறந்து வாழ்ந்தனர். சிவபெருமான் அவர்களுக்கு புத்திபுகட்டத் தீர்மானித்தார். மகாவிஷ்ணுமூர்த்தி அழகான மோகினியாகவும், சிவன் அழகான ஆணாகவும் தோற்றம் எடுத்து தாருகாவனத்தில் நுழைந்தனர்.

"நராரியி னுரிவை நீத்து நக்கனே யாகி முக்கட்
பராபரன் சூலத் தோடு பலிக்கல ணங்கை கொண்டு
முராரிதன் பாங்கர் செல்ல முனிவருங் கிருக்கை யாகத்
தராதல மதிக்க நின்ற தாருகா வனத்திற் புக்கான்"

நர அரியின் உரிவை நீத்து நக்கனே ஆகி முக்கண்
பராபரன் சூலத் தோடு பலிக்கலன் அங்கை கொண்டு
முராரிதன் பாங்கர் செல்ல முனிவருக்கு இருக்கை ஆக
தராதலம் மதிக்க நின்ற தாருகா வனத்திற் புக்கான்

பொழிப்புரை

மூன்று கண்களையுடைய சிவன் நரசிங்கத்தின் தோலுடை நீக்கி நிருவாணியாய், சூலமும் பிச்சாபாத்திரமும் கொண்டு, மோகினியாகிய விஷ்ணு பக்கத்தில் வர முனிவர்கள் இருப்பிடம் அடைந்தார்.

முனிவர்கள் முன்னிலைக்கு மோகினி சென்றது. முனிவர்கள் மோகினிமேல் காமவேட்கை கொண்டு யாகங்களை விட்டு நீங்கி மனமுருகி நின்றார்கள். இது இவ்வாறிருக்கச் சிவனார் முனிவர் பத்தினிகள் உறைவிடம் சென்றார்.

கண்ணனை விடுத்துத் தானோர் கலனோடு சூலமேந்தி
எண்ணரு முனிவர்வைகு மிருக்கையின் மறுகு சென்று
பண்ணிசை மறைகள் பாடி யையமேற் படர்வார் போன்றா
னுண்ணிக முணர்வா் யென்றுமுயிரினுக் குயிராய் நின்றான்

கண்ணனை விடுத்துத் தான்ஓர் கலனோடு சூலம் ஏந்தி
எண்ணரும் முனிவர் வைகும் இருக்கையின் மறுகு சென்று
பண்ணிசை மறைகள் பாடி ஐயம் ஏற்படர்வார் போன்றான்
உள்நிகழ் உணர்வாய் என்றும் உயிரினுக்கு உயிராய் நின்றனன்.

பொழிப்புரை

முனிவர்கள் வசிக்கும் இருப்பிடத்து வீதியிற் சென்று பண்ணிசையும் வேத சுலோகங்களும் பாடினார்.

முனிபுங்குவர்களின் மனைவியர்கள் காமவேட்கொண்டு கருப்பவதியா னார்கள். நாற்பத்தொன்பதினாயிரம் ஆண் பிள்ளைகளைப் பெற்றார்கள்.

முனிவர்கள், சிவனைக் கொல்லுவதற்காக ஒரு யாகத்தைச் செய்தார்கள். இந்த ஓம குண்டத்தில் இருந்து பயங்கரமான புலி எழுந்தது. சிவனார் மீது பாய்ந்தது. சிவனார் அப்புலியின் தோலை உரித்து ஆடையாக அணிந்தார். அதன்பின் மழு ஒன்றை ஏவினார்கள். சிவனார் அதைக் கையில் ஏந்தினார். பின்னர் ஒரு மான் ஓமகுண்டத்தில் இருந்து தோன்றி சிவன்மீது பாய்ந்தது. அதைத் தன் செவியினுக்கு அணித்தாய் வைத்தார். அதன்பின்பு பாம்புகளை ஏவினார்கள். சிவபெருமான் அவற்றை அணிகலன்களாக வைத்தார். அதன்பின்பு பூதவெள்ளம் தோன்றின. சிவன் அவற்றைத் தன் சேனையாக மாற்றினார். அதன்பின்பு அவ்வோம குண்டத்தில் இருந்து வெண்டலை தோற்றியது. சிவபிரான் வெண்தலையைத் தன் சிகையில் தரித்தார்.

அதன்பின்பு, பற்பல மந்திரங்களை ஏவினார்கள். அம்மந்திரங்கள் ஒன்று சேர்ந்து உடுக்கையை ஏந்தினார். யாகத்தில் இருந்து முயலகன் என்றொரு பூதம் தோன்றிப் பாய்ந்தது. சிவபெருமான் தனது வலது காற்பாதத்தின் கீழ் அதை வைத்து மிதித்து நின்றார். முனிவர்கள் சாபங்களை இட்டனர். அவையும் அழிந்து போயின. யாகாக்கினியை ஏவினார்கள். சிவன் அதைத்தன் இடது கையில் வைத்தார்.

இறுதியில் சிவன் அவர்கள்மீது அன்பு சொரிந்து அவர்களை மீட்டார்.

"மாதொருபா கத் தோன்றன்னை மதித்திடா முனிவர்க் கெல்லாம்
போதமே யருளலோடும் பொருக்கென வெழுந்து பொல்லா
வேதமே யியற்றுகின்ற வெம்பெரும் பிழைகள் யாவு
நாதநீ பொறுத்தி யென்று நடநவில் கழன்முன் வீழ்ந்தார்

பொழிப்புரை

தம்முடைய பிழைகளை மன்னிக்க வேண்டும் என்று சொல்லி, முனிவர்கள் சிவனார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்.

ததீசி உத்தரபடலம் 32-127

## உமாதேவியார் சிவனின் இடப்பாகத்தைப் பெற்றமை

"ஏகனே யாகி வைகு மெந்தைதன் னிடப்பா லான
வாகுவை நோக்கு மெல்லைமற்றவ னுமையாள் தோன்றப்
பாகம் திருத்தி யன்னாட் பரிவொடு கலந்து மேவிக்
கோகன் தக்கண் ணானைக் குமரரை யயனைத் தந்தான்"

ஏகனே ஆகிவைகும் எந்தைதன் இடப்பாலான
வாகுவை நோக்கும் எல்லைமற்று அவண்உமையாள் தோன்ற
பாகமது இருத்தி அன்னாள் பரிவொடு கலந்து மேவிக்
கோகனதம் கண்ணானை குமரரை அயனைத் தந்தான்

பொழிப்பு

சிவபெருமான் தன் இடப்பாகத்தை நோக்கும் பொழுது உமையாள் தோன்றினார். உமாதேவியாரை இடப்பாகத்தில் இருத்தி, திருமாலையும், சனகராதி நால்வர் புதல்வர்களையும் பிரமதேவரையும் சிருட்டித்தார்.

"நந்தம தருள தாகு நங்கையோ டினிது சேர்ந்தா
முந்தையின் வேதாச் செய்கைமுற்றிடும் போதி யென்றான்"

பொழிப்புரை

நாம் நமது அருட் சத்தியாகிய உமாதேவியோடு இனிது சேர்ந்தோம். பிரமனின் சிருட்டித் தொழில் இனி முன்போலக் கைகூடும். போகக் கடவாய் என்று பிரமனுக்குத் திருவாய் மலர்ந்தருளினார்.

"என்னுலு முவகை யெய்தி யாமினி யுய்ந்தோ மென்னா
வன்னையொ டத்தன் றன்னை யளியொடு வலஞ்செய் தேத்திப்
பின்னரும் வணக்கஞ் செய்து பெயர்ந்தனர் பின்பு வேதா
மன்னுயிர்த் தொகுதி யெல்லாம் வரன்முறை படைக்க லூற்றான்"

என்னலும் உவகை எய்தியாம் இனி உய்ந்தோம் என்னா
அன்னையொடு அத்தன்தன்னை அளியொடு வலம்செய்து ஏத்திப்
பின்னரும் வணக்கம் செய்து பெயர்ந்தனர் பின்பு வேதா
மன்னுயிர்த் தொகுதி எல்லாம் வரன்முறை படைக்கல் உற்றான்

பொழிப்புரை

யாம் இனி உய்ந்தோம் என்று சிவனையும் உமாதேவியாரையும் வணங்கிப் பின்பு பிரமா படைத்தல் தொழிலை ஆரம்பித்தார்.

"காமரு வடிவா யெங்குங் காண்பதுசத்தி யாங்கண்
மாமய மாகி நின்றான் மன்னில சிவனா மீது
தூமறை முதலா வுள்ள தொல்லைநூல் புகலு மன்னார்
தாமொரு புதல்வன் றன்னைத் தந்தவா சாற்றுகின்றோம்"

காமரு வடிவாய் எங்கும் காண்பது சத்தி அங்கண்
மாமய மாகி நின்றான் மன்னிய சிவனாம் ஈது
தூ மறை முதலாய் உள்ள தொல்லை நூல்புகலும் அன்னார்
தாம் ஒரு புதல்வன் தன்னை தந்தவா சாற்றுகின்றோம்

பொழிப்புரை

காணப்படும் வடிவம் எல்லாம் சத்தியாற் காரியப்பட்டன. அதனால் அவை சக்தி என்பட்டவை. வடிவம் மாமயம் என்க. மா - சக்தி, சக்தி அபின்னமாதலின் மாமயமாகி நின்றான் சிவன் என்க.

ததீசி உத்தரபடலம் 383-388

# சந்திரன் சாபம்

தக்கன் என்பவன் தன்னுடைய இருபத்தேழு நட்சத்திரம் ஆகிய பிள்ளைகளைத் "தண்மதிக் கடவுளாகிய" சந்திரனுக்கு விவாகம் செய்து கொடுத்தான். கொடுத்தபின்பு புத்திமதிகளையும் சொன்னான்.

"ஈந்தபின் மதியை நோக்கி யார்க்குமோர் பெற்றித்தாக
வாய்ந்திடு மார்வமுய்த்து மருவுதி சிலர்பா லன்பிற்
றோய்ந்தொரு சிலரை யெள்ளிச் சுளிகிற்பா யல்லை யென்னாது
வாய்ந்திவை புகன்று தேற்றியனை யரோடேகச் செய்தான்

ஈந்தபின் மதியை நோக்கி யார்க்கும் ஓர் பெற்றித்து ஆக
வாய்ந்திடும் ஆர்வம் உய்த்து மருவுதி சிலர்பால் அன்பில்
தோய்ந்து ஒருசிலரை எள்ளி சுளிகிற்பாய் அல்லை என்னாது
ஆய்ந்து இவை புகன்று தேற்றி அனையரோடு ஏகச் செய்தான்

பொழிப்புரை

சில மனைவிமாரிடம் கூடிய அன்பும், மற்றவரிடம் குறைந்து அன்பும் காட்டாது, சிலரை எள்ளி நகையாது சமமாக வைத்திருக்கவேண்டும் என்று தக்கன் அறிவுரை செய்து அனுப்பினான்.

சந்திரன் கார்த்திகைப் பெண்ணிலும், ரோகிணிப் பெண்ணிலும் அதிக அன்பு கொண்டான். இதைப் பொறுக்க முடியாத ஏனைய பெண்கள் தந்தை தக்கனிடம் முறையிட்டனர்.

"போந்தனர் தக்கன் றன்பாற் பொருமியே பொலம்பூட்கொங்கை
யேந்திழை மாதர் தங்கள் கேள்வன தியற்கை கூறக்
காந்திய வுளத்த னாதிக் கனன்றவன் கலைக ளெல்லாந்
தேய்ந்தில வாகவென்று தீமொழிச் சாபஞ் செய்தான்"

போந்தனர் தக்கன் தன்பால் பொருமியே பொலம்பூட் கொங்கை
ஏந்திழை மாதர் தங்கள் கேள்வனது இயற்கை கூறக்
காந்திய உளத்தனாகிக் கனன்று அவன் கலைகள் எல்லாம்
தேய்ந்து இலவாக என்று தீமொழிச் சாபம் செய்தான்

பொழிப்புரை

பிள்ளைகள் புருஷனது இயற்கை கூறினதும் தக்கன் கோபித்து "சந்திரனின் கலைகள் தேய்ந்து இல்லாமல் போக" என்று சபித்தான்.

"மூன்றுற ழைந்து வைகன் முடிந்துழி மதிய மென்போ
னான்றதண் கலையின் மூவைந் தழிதலு மவனே யென்னச்
சான்றுரை செய்த போலோர் தண்கலை யிருத்த லோடு
மான்றனன் மெலிந்து வெள்கி வானவர் கோனை யுற்றான்"

மூன்று உறழ்ஐந்து வைகல் முடிந்துழி மதியம் என்போன்
ஆன்றதன் கலையில்மூ ஐந்து அழிதலும் அவனே என்னச்
சான்றுரை செய்தல் போல் ஓர் தண்கலை இருத்தல் ஓடும்
மான்றனன் மெலிந்து வெள்கி வானவர்கோனை உற்றான்

பொழிப்புரை

பதினைந்து நாட்கள் முடிவில் ஒரு கலை மட்டும் எஞ்சியிருந்தது. அதனால் வெட்கம் அடைந்தான். இந்திரனிடம் சென்றான்.

இந்திரன் பின்வருமாறு கூறினான்.

"எந்தைவாழ் கயிலை தன்னி லிபமுகன் முதிரை யாவுந்
தந்தபே ரகடு மங்கைச் சகுலியு நோக்கி நக்கா
யந்தநா ளனையான் சீறி யாருநிற் காணாராகி
நிந்தை செய்தகல வேநீச ரிற் றிகழ்தி யென்றான்"

எந்தை வாழ் கயிலை தன்னில் இபமுகன் முதிரை யாவும்
தந்த பேர் அகடும் அங்கை சகுலியும் நோக்கி நக்காய்
அந்தநாள் அனையான் சீறி யாரு நிற் காணாராகி
நிந்தை செய்தகலவே நீ நீசரிற் திகழ்தி என்றான்

பொழிப்புரை

விநாயகப் பெருமான் சிறுதானியங்களை உட்கொண்டு, பெருவயிற்றையும் பார்த்து நீ ஏளனமாகச் சிரித்தாய். நீ தேய்ந்து எவருக்கும் தோன்றாமல் அழிந்து போகவேண்டும் என்று விநாயகப் பெருமான் சாபம் இட்டார். இவ்வாறு இந்திரன் சந்திரனிடம் கூறினான்.

இதனால் வருத்தம் உற்ற பிரமதேவன் முதலான தேவர்கள் பின்வருமாறு விநாயகப்பெருமானிடம் வேண்டினார்கள்.

"காண்டகு நினது மேன்மை கருதிடா னிகழ்ந்து மாசு
பூண்டன னதனாற் றிங்கள் பொருமலுற்றொடுங் மன்னான்
வேண்டுமிவ் வுலகிற் கெந்தை விதித்திடு சாபத் தன்மை
யாண்டொரு வைகல்போற்ற அருள்புரிந்து அளித்தி என்றார்"

காண்தகு நினது மேன்மை கருதிடான் இகழ்ந்து மாசு
பூண்டனன் அதனால் திங்கள் பொருமல் உற்று ஒடுங்கும் அன்னான்
வேண்டும் இவ் உலகிற்கு எந்தை விதித்திடு சாபத்தன்மை
ஆண்டு ஒரு வைகல் போற்ற அருள்புரிந்து அளித்தி என்றார்

பொழிப்புரை

தான் செய்த குற்றத்துக்கு வருந்துகிறான் எம்பெருமான் இட்ட சாபத்தினை ஓராண்டுக்கு ஒரு நாள் அனுசரிக்கக்கிருபை செய்து இரட்சிப்பீர் என்று கேட்டார்கள்.

"ஐங்கர னதனைக் கேளா வவ்வகை யருள வெய்யோன்
றிங்களின் முதலாம் பாலிற் செல்லுறு நாலாம் வைகல்
மங்குல் சூழுலக நோக்கா மரபினால் வதிந்தாய் மற்றப்
புங்கவற் கந்நாள் மிக்க பூசனை புரிய மேலோர்"

ஐங்கரன் அதனைக் கேளா அவ்வகை அருள வெய்யோன்
திங்களின் முதலாம் பாலில் செல்லுறு நாலாம் வைகல்
மங்குல் சூழ் உலகம் நோக்க மரபினால் வதிந்தாய மற்ற
புங்கவற்கு அந்நாள் மிக்க பூசனை புரிய மேலோர்

பொழிப்புரை

விநாயகப் பெருமான் சம்மதித்தார். ஆவணி சதுர்த்தியில் உலகோர் நோக்கா முறையில் விசேட பூசனைபுரிய நீ ஒதுங்கி வாழ்வாய். நீ - சந்திரனைக் குறிக்கும்.

மேலும் இந்திரன் சொன்னார்:
"இது பழி ஒன்று நிற்க இன்று நீ தக்கன் தன்னால்
புதியதோர் குறையும் பெற்றாய்..."

எனவே தக்கன் தந்தையாகிய பிரமதேவரிடம் சென்று முறையிடு என்று இந்திரன் கூறினார். சந்திரன் பிரமதேவரிடம் சென்று முறையிட்டான். தன்மகன் தக்கன் தன்சொல்லைக் கேளான் என்றார் பிரமதேவர். நீ சிவபெருமானிடம் சென்று உன் குறையைக் கூறு என்றார்.

சந்திரன் கைலயாங்கிரிக்குச் சென்று சிவனிடம் முறையிட்டான்.

"தீர்ந்தன வன்றியே திங்கட் டன்னிடை
யார்ந்திடு கலையினை யங்கை யாற்கொளா
வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினான்
சார்ந்தில தவ்வழித் தக்கன் சாபமே"

தீர்ந்தன அன்றியே திங்கள் தன்இடை
ஆர்ந்திடு கலையினை அம் கையால் கொளா
வார்ந்திடு சடைமிசை வயங்கச் சேர்த்தினான்
சார்ந்து இலது அவ்வழித் தக்கன் சாபமே

பொழிப்புரை

சிவபெருமான் தன்னுடைய கையினால் ஒற்றைக் கலையை எடுத்துத் தன்னுடைய சடையிலே வைத்தார். அதனால் தக்கனுடைய சாபம் செயற்பட வில்லை. சிவபெருமான் மேலும் கூறினார்.

"நின்ன தொல்கலை யைந்துமுப் பகலிடை நிரம்பப்
பின்ன ரவ்வழி தேய்ந்துவந் தோர்கலை பிரியா
தின்ன பான்மையே நிகழுமேக காலமு மென்றான்
முன்னை யாவிதோ றிருந்தெலா மியற்றிய முதல்வன்"

தின்ன தொல்கலை ஐந்துமுப் பகலிடை நிரம்பப்
பின்னர் அவ்வழி தேய்ந்து வந்து ஓர்கலை பிரியாது
இன்ன பான்மையே நிகழும் ஏககாலமும் என்றான்
முன்னை ஆவிதோறு இருந்து எலாம் இயற்றிய முதல்வன்

பொழிப்புரை

உன்கலைகள் பதினைந்து நாள் வளர்ந்து பின்பு ஒருகலைவரை தேய்ந்து. மேலும் வளரும். இதுவே இனி எக்காலமும் உனது இயற்கை என்று சிவன் கூறினார்.

தக்ச காண்டம் : சந்திரசாப படலம்

# மார்க்கண்டேயர் வரலாறு

கடகம் என்னும் நகரத்திலே பெருந்தவத்தின் ரான குச்சகர் என்னும் பிராமணர் வசித்து வந்தார். அவருடைய புதல்வராகிய கௌச்சிகர் என்பவர் வேதங்களில் மிக வல்லவராய் பிறவிக்கடலில் நின்று நீங்கும் பொருட்டுச் சிவபிரானைச் சிந்தித்துத் தவம் புரிந்தார் செவி, தோல், கண், நா, நாசி ( முறையே சுரோத்திரம், துவக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம்) ஆகியவை உணர்வின்றி மரம்போல் இருந்து தவம் செய்தார். காட்டு மிருகங்கள் அவரை ஆவுரஞ்சு மரம் என்று கருதித் தாங்கள் சொறியை நீக்குவதற்காக அவரில் உரஞ்சுவார் இவருடைய தவத்தைக் கண்டு மகா விஷ்ணு மூர்த்தி அவரின் முன் தோன்றி " முனிவரே இனிமேல் உன் பெயர் மிருகண்டுயர் " என்று கூறிமறைந்தார்.

ஆவுரஞ்சு மரம்போல் ஐம்பொறிகளை அடக்கி உணர்ச்சியின்றித் தவம் செய்த காரணத்தால் இந்நாமத்தைச் சூட்டினார் கௌச்சிகன் - இப்பொழுது மிருகண்டுயர் - தன் தகப்பனிடம் இந்நிகழ்ச்சியைக் கூறினார். பின்பு அவர் விவாகம் செய்து மிருகண்டு என்னும் புதல் வரைப் பெற்று வாழ்நாளிலே, அவருக்கு ஆறு வயதிலே உபநயனம் செய்து வைத்தார்.

மிருகண்டு முனிவர் பிரம்மச்சாரிய விரதத்தை அனுட்டித்து முடிந்த பின்பு, முற்கல முனிவருடைய புதல்வி, மருத்துவதியை விவாகம் செய்து வாழ்நாளிலே, புதல்வர் இல்லாதகாரணத்தால், காசியை அடைந்து மணிகன்னினை என்னுந் திருக்கோயிலுக்குச் சென்று, சிவனை வழிபட்டுத் தவஞ்செய்தார். அப்பொழுது சிவன் காட்சி கொடுத்து " நீயாது விரும்பினாய " என்று வினவியருளலும், "எம்பெருமான் அடியேன் புத்திரபாக்கியத்தை விரும்பினேன், தந்தருள வேண்டும்" என்றார். சிவபிரான் பின்வருமாறு விடையளித்தார்.

"தீங்குறு குணமே மிக்குச் சிறிதுமெய் யுணர்வி லாமல்
மூங்கையும் வெதிருமாகி முடமுமாய் விழியும் இன்றி
ஓங்கிய ஆண்டு நூறும் உறுபிணி யுழப்போ னாகி
ஈங்கொரு புதல்வன் தன்னை யீதுமோ மாதவத்தோ"

பொழிப்புரை

தீக்குணம் உடையவனாய, அறிவுசிறிதும் இலாதவனாய், ஊமையாய், முடவனாய், குருடனாய், நோயாளியாய் நூறுவருடம் வாழும் புதல்வன் தருவதோ அன்றேல்

"கோலமெய் வனப்பு மிக்குக் குறைவிலா வடிவ மெய்தி
ஏலுறு பிணிகள் இன்றி எமக்குமன் புடையோனாகிக்
காலமெண் ணிரண்டே பெற்றுக் கலைபல பயின்றுவல்ல
பாலனைத் தருது மோன் எண்ணமென் பகரதி யென்றான்"

பொழிப்பு

அழகுடையோனாய் உறுப்புகள் குறைவிலாதவனாய், நோயின்றி எமக்கும் அன்புடையோனாகி பதினாறு வயது மட்டும் வாழும், கலைகள் பலவற்றைக் கற்று, வல்லமையுடைய ஒரு பாலனைத் தருவதா, உனது எண்ணத்தை கூறுவாயாக. அவர்கள் 16 வயதானாலும், சிறந்த புதல்வனைத் தருக என்றனர்.

பிறந்த புதல்வருக்குப் பிரமதேவர் மார்க்கண்டேயர் என்னும் நாமஞ்சூட்டினர். 16வயது அடைந்த காலத்தில் தாய், தந்தையர் அழுது வருந்துவதை மார்க்கண்டேயர் அவதானித்தார். அவர்களை வினவி உண்மையை அவர் அறிந்தார். மார்க்கண்டேயர் சிவபிரானை அன்போடு வணங்கி வந்தார். சிவபிரான் வெளிப்பட்டு "நீ விரும்பியது யாது" என வினவினார். அதற்கு மார்க்கண்டேயர் பின்வருமாறு கூறினார்.

"ஐயனே அமலனே அனைத்து மாகிய
மெய்யனே பரமனே விமல னேயழற்
கையனே ஐயனேன் காலன் கையுற
துய்யநேர் வந்து நீ உதவென் றோதலும்"

மலமற்ற தலைவனே, நான் காலன் கையில் அகப்படா வண்ணம் எனக்கு ஐயனே வந்து உதவவேண்டும் என்றார்.

சிவன் "அஞ்சலை அஞ்சலை" என்றார். இயமதூதர்களால், உயிரைக் கவர முடியவில்லை. எனவே இயமனே, நேரிற் சென்றார். சிவலிங்கத்துக்குப் பக்கத்தில் நின்ற சிறுவன் மீது, தனது பாசக்கயிற்றை எறிந்தான். சிவபிரான் "நீ அஞ்சலே" என்று மார்க்கண்டேயருக்குக் கூறி

"மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்தன் உயிர் வாங்கப்
பதைத்தான் என்னா உன்னிவெ குண்டான் பதிமூன்றுஞ்
சிதைத்தான் வாமச் சேவடி தன்னால் சிறிதுந்தி
உதைத்தான் கூற்றன் விண்முகில் போல் மண்ணுற வீழ்ந்தான்"

சிவபிரான் தன் இடப்பாதத்தால் சிறிது உதைத்தார். கூற்றுவன் வீழ்ந்தான்.

சிவபெருமான் பின்வருமாறு கூறினார்.

"மைந்த நீநமை வழுத்தி மாசிலா
முந்து பூசனை முயன்ற தன்மையால்
அந்த மில்லதோர் ஆயுள் நிற்கியாந்
தந்து நல்கினோம் என்று சாற்றினான்"

மூலம் - அசுர காண்டம்

அடிமுடி தேடிய வரலாற்றில் திருமால் பன்றி உருவாய் மாறி ஒளிப்பிழம்பின் அடியைக் காண்பதற்காக நிலத்தைக் கிழித்துச் சென்றார். ஒளிப்பிழம்பு சிவன் என்பதை அவரால் அறிய முடியவில்லை. அன்று சிவபெருமானின் திருவடியைக் காணாது மீண்டார் திருமால். இயமனுக்கு உதைத்த காலை இயமனும், மார்க்கண்டேயரும் கண்டனர். திருமால் காணாத திருவடியை இவர்கள் கண்டனர். அவர்கள் இருவரும் செய்த தவப்பேறு

# காமதகனப் படலம்

மன்மதன் என்ற தேவன் காமத்துக்குப் பொறுப்பாயுள்ளவர். தன்னுடைய புஸ்ப்பாணங்களை ஏவி காம உணர்ச்சியைத் தோற்றுவிப்பது அவனுடைய கடமை.

ஒருநாள் பிரமதேவர் மன்மதனை நோக்கிப் பின்வருமாறு கூறினார். நீ எங்கள் பொருட்டுத் திருக்கயிலாய மலையிற் சென்று சிவபெருமான் மௌனம் நீங்கி உமாதேவியாரைத் திருக்கல்யாணம் செய்யும்பொருட்டு அவர்மீது உன் பாணங்களைத் தொடுப்பாயாக என்றார். மன்மதன் பின்வருமாறு கூறினான். அவ்வாறு சிவபெருமானின் மோனநிலையைக் குழப்புதல் பாவம். நான் அதைச் செய்யமாட்டேன். பிரமதேவர் பல வரலாறுகளையும், தத்துவங்களையும் கூறி மன்மதனைச் சம்மதிக்க வைத்தார். திருக்கயிலாயம் சென்ற மன்மதன் புஸ்ப்பாணங்களைச் சிவபெருமான் மீது விடுத்தான். அவை திருமேனிமீது படலும் சிறிது பார்த்தார். மன்மதன் பற்றி எரிந்து சாம்பரானான்.

“விட்டவெம் பகழி ஐந்தும் வியத்தகு விமலன் மீது
பட்டலுஞ் சிறிதே வேளைப் பார்த்தனன் பார்த்தலோடும்
கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற்
சுட்டது கயிலைமுற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே”

மன்மதனின் துணைவி இரதி தன் கணவன் இறந்ததனால் ஆறாத்துயரில் ஆழ்ந்தாள். சிவபெருமான் கருணை கூர்ந்து பின்வருமாறு கூறினார். “இரதியே நீ புலம்பாது ஒழி. நாம் இமயமலை மீது சென்று உமையை விவாகஞ் செய்யும் பொழுது உன் நாயகனை உயிர்ப்பித் தருளுவோம்” பின்பு அவ்வாறே செய்தருளினார்.

மூலம் : காமதகனப்படலம்
அசுரகாண்டம்

# அடிமுடி தேடிய வரலாறு

பிரமதேவரும், மகாவிஷ்ணுவும் இருவரில் யார் முழுமுதற் கடவுள் என்று நீண்டகாலம் போர் புரிந்தனர். இவ்வாறு போர்புரிந்த காலை, சிவபெருமான் திருவருளால் நாரதமுனிவர் அவர்கள் முன்தோன்றி, அவர்களுக்கு புத்தி கூறினார்.

"கடவுளை மறந்திரேற் கருதி நீர்பெறு
மடுபடை நாமமு மயர்த்தி ரோவது
நெடிதுநும் மனத்தினி நினைந்து தேற்றுமின்
விடுமினி யமரென விளம்பி மேலுமே"

கடவுளை மறந்திரேல் கருதி நீர்பெறு
அடுபடை நாமமும் அயர்த்தீர் ஓ அது
நெடிதுநும் மனத்தினில் நினைத்து தேற்றுமின்
விடும்இனி அமர்என விளம்பி மேலுமே

பொழிப்புரை

நீர் கடவுளை மறந்துவிட்டீர். உங்களுக்கு அவர் தந்த சிவப்படையின் பேரையும் மறந்துவிட்டீர். இனிப் போரை விடுங்கள்.

மேலும் நாரதர் கூறுவார்.

"வாதியா வின்னுநீர் மலைதி ரெயெனி
னாதிய யருவுரு வான தோர்பொருள்
சோதியாய் நடுவுற்த் தோன்றுங் காண்டிரென்
றோதியா லைமக்கிவை யுணர்த்திப் போயினான்

பொழிப்புரை

பரம்பொருள் உங்கள் மத்தியில் சோதியாய்த் தோன்றிநிற்கும் என்று நாரதர் கூறிச்சென்றார்.

அச்சோதியின் முடியைக் காண்பதற்குப் பிரமா அன்னம் வடிவாகவும், திருமால் பன்றி வடிவாகவும் முடியையும், அடியையும் முறையே தேட

ஆரம்பித்தனர். இருவரும் நீண்ட காலம் தம்தம் முயற்சியில் ஈடுபட்டனர். தம்முடைய முயற்சியில் தோல்வி கண்டனர். அப்பொழுது சிவபெருமான் பிரசன்னமானார்.

"மைக்களமு மான்மழுவும் வரதமுட பயமுற
மெய்க்கரமு நாற்புயமும் விளங்குபணிக் கொடும் பூணும்
செக்கருறு மதிச்சடையுஞ் சேயிழையோர் பாகமுமாய்
முத்கணிறை யாங்காண முன்னின்றே யருள்புரிந்தான்

மைக்களமும் மான்மழுவும் வரதமுடன் அபயமுற
மெய்க்கரமும் நாற்புயமும் விளங்குபணிக் கொடும்பூணும்
செக்கர் உறு மதிச்சடையும் சேயிழையோர் பாகமுமாய்
முக்கண் இறை யாங்காண முன்னின்றே யருள் புரிந்தார்

பொழிப்பு

சிவபெருமான் தனது தடத்த இலக்கணத்துக்குரிய தோற்றத்துடன் எம்முன் தோன்றினார் என்று பிரமதேவன் தன் மகன் தக்கனுக்குக் கூறினார்.

"அரியும் யானுமுன் றேடுமவ் வனற்
கிரியெ னும்படி நின்றதா லவ்வொளி கிளர்ந்த
விரவ தேசிவ ராத்திரி யாயின திறைவற்
பரவி யுய்ந்தன ரன்னதோர் வைகலிற் பலரும்"

அரியும் யானும் முன்தேடும் அவ்அனல்
கிரியெ னும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த
இரவு அதே சிவராத்திரி ஆயினது இறைவன்
பரவி யுய்ந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும்

பொழிப்புரை

அந்த மலைபோன்ற தீப்பிளம்பு தோன்றிய இரவு சிவராத்திரி ஆகும். உலகத்தவர் சிவலிங்கப் பெருமானை விதிப்படி பூசித்து வீடு பெற்றனர். அத் தீப்பிழம்பு இலிங்கோற்பவர் என வணங்கப்படுகின்றது.

அடிமுடி தேடிய படலம் - தக்ச காண்டம்

# இராவணன் வரலாறு

"திருக்கோணாசல வைபவம்" என்ற நூலிலே அதன் ஆசிரியர் வே. அகிலேசப்பிள்ளை பின்வருமாறு கூறியுள்ளார்.

"தேவலோகம்போல் விளங்கும் இலங்காபுரியை அரசு செய்த விச்சிரவசு என்பவனின் புத்திரனாகிய தசக்கிரீவன் பதினாயிரம் வருட காலம் அருமையான தவஞ்செய்து, மிகுந்த வரங்களைப் பெற்றுத் தனது தமையனாகிய குபேரனிடத்தில் இலங்கை அரசுரிமையைக் கைக்கொண்டு அரசுபுரிந்தான். அவன் தாயாகிய கைகேசி நெற்குற்றிக் கொண்டு நிற்பதைத் தசக்கிரீவன் கண்டு நெற்குற்றுவதற்குரிய காரணத்தை வினவினான். "மகனே! சிவலிங்கப் பெருமான் பேரிலே நான் கொண்டிருக்கும் அன்பு மிகுதியினாலே அவருடைய திருவுருவத்தை மாவினாலே நாளொன்றுக்கு ஆயிரஞ்செய்து மகாவலி கங்கைக் கரையிலே வைத்துப் பூசைசெய்து, பின்பு அவ்விலிங்கங்களைக் கங்கையில் விடுவது வழக்கமாதலால் நாளைக்கு மா இல்லாததனால் நெல் குற்றுகின்றேனென்று சொன்னாள்".

"விட்டுணுமூர்த்தி ஒரு வயோதிபப் பிராமண வடிவங்கொண்டு தசக்கிரீவன் முன்வந்து நீயார்? எங்கே போகின்றாய்? என்று வினாவினார்" தசக்கிரீவன் தன்னுடைய பெயர் இன்னது என்றும், சிவபிரானிடம் சிவலிங்கம் வாங்கும் பொருட்டுக் கைலாசம் செல்கிறேன் என்றான்.

விட்டுணுமூர்த்தி பின்வருமாறு கூறினார். "நீ அரசு செய்யும் இலங்காபுரிக்கு உத்தரபாகத்தில் தக்சணகைலாயம் இருக்கின்றது. அவ்விடத்தில் உள்ள சிவலிங்கங்கள் மகாவிசேஷமுடையன" அந்த மலையை அசைத்தான். கைலாய பருவமானது அசையவில்லை. அவன் பின்பு கையில் இருந்த வாளினால் பருவதத்திற்குத் தெற்குப் பக்கத்தில் ஓங்கிவெட்டினான். கைலாசமலையின் கீழாக இறங்கித் தனது இருபது புயங்களினாலும் அதைத் தூக்கினான். பேர் அதிர்ச்சி ஏற்பட்டது.

பின்பு கோணநாயகர் வீராசன முறையாக இருந்து தனது திருப்பாதத்தின் பெருவிரலால் கைலாச மலையை ஊன்றினார். அப்போது கைலாச மலையானது தசக்கிரீவனை நசுக்கியது.

பின்பு தனது தலையிலொன்றைத் திருகி அதையொரு சுரைப்பத் தரையாகவும்,கையிலொன்றை முறித்து, அதிலுள்ள எலும்புகளைத் தடியாகவும், விரல்களை முறுக்காணிகளாகவும், நரம்புகளைத் தந்திகளாகவும் சேர்த்து ஒரு வீணை செய்து "வீணாகானஞ் செய்தான். அப்பொழுது கோணநாயகர் திருவுளங்கொண்டு குறைந்த அவயங்களை மீண்டும் கொடுத்து ஒரு சிவலிங்கமும் ஈந்து இலங்காபுரிக்குப் போகும்படி விடைகொடுத்தார்.

மலையிலே இராவணனால் வெட்டப்பட்டு ஏற்பட்ட பிளவு இராவணன் வெட்டென்று அழைக்கப்படுகின்றது.

# முப்புரம் எரித்த வரலாறு

தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்கள் நீண்டகாலம் சிவபிரானை நோக்கித்தவம் செய்தனர். அவர்கள் சிவபிரானிடம் நீண்ட ஆயுளும், எல்லையற்ற சக்தியும் கேட்டுப் பெற்றனர். அதன் பயனாக மூன்றுபேரும் மூன்று பறக்கும் கோட்டைகளில் சஞ்சாரம் செய்து தேவர்களுக்கும் பிறருக்கும் அளவிலாத் துன்பத்தை ஏற்படுத்தினர். தாரகாக்கன் பொற்கோட்டையிலும், கமலாக்கன் வெள்ளிக்கோட்டையிலும், வித்யுன்மாலி இரும்புக் கோட்டையிலும் ஆக அந்தரத்தில் பறந்து திரிந்தனர். தங்கள் மீது வாரி வீசப்பட்ட துன்பத்தைத் தாங்க முடியாமல் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். சிவபிரான் அவர்கள் கூறியவற்றைக் கேட்டுக் கண்ணீரை உகுத்தார். இக்கண்ணீர்த்துளி திரண்டு வலுப்பெற்று உருத்திராட்சம் எனவும், சிவமணி எனவும் அழைக்கப்பட்டது. அவர்களுடைய ஆணவத்தை அடக்கப் போருக்கு சிவன் எழுந்தார். இவ்வசுரர்கள் முன்பு முறையே சுகுணன், சுசீலன், சுபத்தி எனப்பெயர் தாங்கி இருந்தனர் எனப்படுகின்றது.

இவர்களை நல்வழியில் இருந்து தீய வழிக்கு வழிப்படுத்தியவர்கள் திருமாலும், நாரதரும் எனக் கூறப்பட்டுள்ளது. இதை மறுத்துக் கூறப்பட்டும் உள்ளது. சிவபிரானுக்குப் போருக்குச் செல்லத் தேர் அமைக்கப்பட்டது. திரிபுரத்தகனத்துக்காகச் சிவனார் ஊர்ந்து செல்லுதற்காகத் தேவர்கள் எல்லோரும் கூடி ரதம் ஒன்றை நிர்மாணித்தார்கள். தேவர்கள் எல்லோரும் வெவ்வேறு உறுப்புக்களாக அத்தேரில் அமைந்திருந்தார்கள். வேதங்களைக் குதிரைகளாக அதற்குப் பூட்டினார்கள். பிரமதேவன் சாரதியாய் அமர்ந்தார். ஒவ்வொரு தேவனும் ரதத்தில் தான் வகித்த ஸ்தானத்தின் சிறப்பைக் குறித்துத் தற்பெருமை கொண்டான். சிவபெருமான் திருவடி ரதத்தில் வைத்ததும் ரதம் முறிந்தது என்பர். சிவன் மேருவை வில்லாகவும், தீ அம்பின் அடியாகவும்,திங்கள் அம்பின் நடுவாகவும், காற்று அம்பின் இறகாகவும் அம்பு அமைக்கப்பட்டது என்பர். ஆனால் சிவபிரான் தான் கொண்டுசென்ற ஆயுதங்களைப் பயன்படுத்தும் நிலைமை ஏற்படவில்லை. அவருடைய புன்சிரிப்பு முப்புரங்களையும் எரித்தது.

மூலம் - சிவலிங்கபுராணம்

நவநீத கிருஷ்ண பாரதியார் பின்வரும் விளக்கத்தை இந்நிகழ்ச்சிக்கு அளித்துள்ளார்.

இதன் உருவக உள்ளுறை வருமாறு: உடம்பினைத் தேரெனவும், திருவடியினைத் திருவருள் எனவும், அச்சினை ஊழ் எனவும், முப்புரத்தினை மும்மல காரியமெனவும், முப்புரங்கள் எரித்ததை மும்மலம் ஒழிந்தமை எனவும் விளக்கியுள்ளார். பிறப்பின்கண் அச்சாக இருப்பது இருண்மலம் (ஆணவம்), சிறப்பின்கண் அச்சாகத்திகழ்வது திருவருள். அருளாக மிளிரும் திருவடி தேரில் வைக்கப்பட்டதும், மருள்(ஆணவம்) என்ற அச்சு முறிந்தது. மருள் நீங்கின என்பது கருத்தாகும்.

திருமூல நாயனாரின் கூற்று இவ்விடத்தில் நோக்கற்பாலதாகும்.

"அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே"

திருப்புகழின் கண்ணும் இது கூறப்பட்டுள்ளது.
"முப்புரம் எரிசெய்த அச்சிவன்
உறைரதம், அச்சது பொடிசெய்த அதிதீரா"

சிவபிரான் தேவர்களின் துன்பங்களைக் கேட்டு உகுத்த கண்ணீர்த்துளி திரண்டு வலுப்பெற்று உருத்திராட்ச மணி ஆனது.

உருத்திராட்சமணி (சிவமணி) புறக்காவல்
திருவெண்ணீறு அகப்புறக்காவல்
திருவைந்தெழுத்து அகக்காவல் எனப்படும்.

திருவுந்தியாரில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.
"ஈரம்பு கண்டிலன் ஏகம்பர் தம் கையில்
ஓர் அம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெரு மிகை உந்தீ பற"

ஓரம்பு கூட மிகையாகிவிட்டது. அது பாவிக்கப்படவில்லை.

சிவபெருமான் கருணையுள்ளவர். பகைவரையும் மன்னிக்கும் பண்பு கொண்டவர். இவ்வரலாற்றை மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

"உய்யவல் ராரொரு மூவரைக் காவல்கொண்
டெய்யவல் லானுக்கே யுந்தீபற
விளமுலை பங்கனென் றுந்தீபற"

பிழைக்க வல்லவராயிருந்த மூன்று அசுரர்களையம் கயிலைக்குத் துவார பாலகராகச் செய்தான் சிவன்.

சிவபெருமானுடைய குமிண்சிரிப்பு நல்லார்க்கு இன்பமும், பொல்லார்க்குத் துன்பமும் விளைவிக்கும்.

உடம்பு எரிதல் என்பது, உயிரின் மாசை அகற்றலாகும். முப்புரம் எரிதல் என்பது மாசாகிய மும்மலங்களை அகற்றலாகும்.

உருத்திராட்சம் = உருத்தரன் + அக்கம்
உருத்தரன் = சிவபெருமான்
அக்கம் = கண்

கண்ணில் இருந்து உகுத்த நீர்த்துளி = அக்கம் கண்ணீர்த்துளி
எனவே உருத்திராட்சம் என்பது சிவனாரின் கண்ணீர்த்துளிகள்.

# உமாதேவியார் மலையரசன் மகளாகிய வரலாறு

சிவபெருமானின் வாமபாகத்தில் எழுந்தருளியிருந்த உமாதேவியார் சிவனாரிடம் பின்வருமாறு கூறினார். பரம பிதாவாகிய உம்மை இகழ்ந்த தக்கனிடத்தே அடியேன் சிலகாலம் வளர்ந்து தாட்சாயினியென்னும் நாமம் பெற்றேன். இனி இச்சரீரத்தைத் தரித்தற்கு அஞ்சுகின்றேன். ஆகவே இவ்வுடம்பை நீக்கப் பணித்தருளும் என்று விண்ணப்பித்தார்.

சிவபெருமான் பின்வருமாறு கூறினார். உன்கருத்து முற்ற வேண்டுமாயின். சொல்வேன் கேள். இமயமலை அரசன் உன்னைத் தன் மகளாக வளர்த்து நமக்கு விவாகஞ் செய்து தர விரும்பி, நம்மைநோக்கிக் கடுந்தவஞ் செய்துவருகிறான். நீ ஒரு குழந்தை வடிவாய் அவனிடம் சென்று வளர்ந்து ஐந்து வயதானபின் நம்மை நோக்கித் தவஞ்செய்யக் கடவாய்.

உடனே உமாதேவியார் திருக்கயிலாயமலையில் நின்று நீங்கி இமய மலையை அடைந்தார். இமயமலையின் மேலே மானசவாவியென்னும் பெயருடைய ஒரு தடாகம் உண்டு. அதன் அருகே இமயமலையரசன் தவஞ்செய்து கொண்டிருக்கின்றான். அவ்வாவியில் ஒரு தாமரை மலரின்மேலே குழந்தை வடிவாய் உமாதேவியார் எழுந்தருளினார்.

உமாதேவியார் அடியேன் பொருட்டு சிவனை நீங்கினார் போலும் என்று ஆடிப்பாடி மகிழ்ச்சியடைந்தார்.

"பங்கயத் தவிசின் வைகும் பராபரை தன்னைத் தனாது
செய்கையி னெடுத்து வல்லே சென்னிமேற் றாங்கி யேகித்
துங்கநல் லிமையத் தண்ணல் தொன்முறை யிருக்கை புக்கு
மங்கலமேனை யென்னும் மனைவிகைக் கொடுத்தான் மாதோ"

ஐந்து வயதானதும் தவஞ்செய்ய அனுமதி கோரினார். மலையரசன் அதற்கு இயைந்து அம்மலையின் ஒரு பக்கத்தே தவச்சாலை செய்வித்து, பார்பதியை அஙகே விடுத்தார். நீண்டநாள் தவத்தின் பின்பு, சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணஞ் செய்யத் திருவுளங் கொண்டார்.

சிவபெருமான் சப்த இருடிகளை நினைத்தார். சப்த இருடிகள் அவர்முன் சென்றனர். அவர்களை நோக்கிப் பின்வருமாறு கூறினார். "நீங்கள் இமயமலை அரசனிடத்துச் சென்று, பார்பதியை நமக்கு விவாகம் செய்து தரும்வண்ணம் பேசிக்கொண்டு வரவும்" இருடிகள் மலையரசன்முன் சென்று விண்ணப்பித்தனர். மலையரசன் சம்மதம் தெரிவித்தார். பின்பு இமயமலையரசன் திருக்கயிலாய மலையை அடைந்து சிவனை வணங்கிக் கூறுவார்.

"ஆதியி னுலகை மெல்லா மளித்திடு மன்னை தன்னைக்
காதலின் வதுவை செய்யக் கருதினை கணித நூலோர்
ஓது பங்குனியின் திங்கள் உத்தரம் இன்றே யாகும்
ஈதுநன் முகூர்த்தம் எந்தாய் இமயமேல் வருதி யென்றான்"

சிவபெருமான் இமயமலைக்குச் செல்ல ஆரம்பித்தார். பெருந்தொகையினர் இமயமலைக்குச் சென்ற காரணத்தால், பூமியின் வடபால் தாழ்ந்து தென்பால் உயர்ந்தது.

அதைச் சமன் செய்வதற்காக அகத்திய முனிவரைப் பொதிய மலைக்குச் சென்று இருக்கக் கடவாய் என்று திருவாய் மலர்ந்தருளினார். நாம் அங்கே வந்து எமது திருக்கல்யாணக் கோலத்தை உனக்குக் காண்பிப்போம் என்றார்.

பின்பு பிரமதேவர் விவாகச் சடங்கனைத்தையும் நிறைவேற்றினார்.

மூலம் - கந்தபுராணம் - உற்பத்தி காண்டம்

# இராவணேஸ்வரனின் பூர்விகம்

"இலங்காபுரியை அரசு செய்த விச்சிரவசு என்பவனின் புத்திரனாகிய தசக்கிரீவன் பதினாயிரம் வருடகாலம் அருமையான தவஞ்செய்து, மிகுந்த வரங்களைப் பெற்றுத் தமையனாகிய குபேரனிடமிருந்து இலங்கை அரசுரிமையைக் கைக்கொண்டு, பாவபுண்ணியங்களைச் சிறிது கவனியாமல் தேவர்களுக்கு மிகுந்த நிட்டூரங்களைச் செய்து இராச்சிய பரிபாலனஞ் செய்தான்."

புலவர் அகிலேசபிள்ளை என்பவரால் 1889ம் ஆண்டு சர்வாதி வருடம் வெளியிட்ட "திருக்கோணாசல வைபவம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

பத்துத் தலை, இருபது தோள், இருபது கைகளுடன் ஓர் உயிர் வாழமுடியாது என்றும் அதன் காரணமாக இராமாயணம் புனைகதை என்றும் சிலரால் கருதப்படுகின்றது.

இராமாயணம் கற்பிப்போர்க்கு அந்நூலின் இலக்கியச் சுவையே முக்கியம். உயிரியல் பிரச்சினையை கருத்திற்கொள்வதில்லை.

இது தொடர்பாக வடலூர் இராமலிங்க வள்ளலாரின் கருத்தை நோக்க வேண்டும். 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த வள்ளலார் ஐந்தாவது குரவராகக் கருதப்படுகின்றார். அவருடைய பாடல்கள் ஆறு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. அவருடைய பாடல்கள் திருவாசகத்தைப் போன்று தெய்வீகத்தன்மை வாய்ந்தவை என்பதனாலேயே அவர் ஐந்தாம் குரவராகக் கருதப்படுகின்றார்.

அடிகளார் கூறினார். "எளியவர்கள் இலகுவில் விளங்குவதற்காகத் தத்துவங்கள் சிறுகதைகளாக வகுக்கப்பட்டன" எனவே சிறுகதைகள் அல்லது உருவகக் கதைகள் கற்பனையால் மூடப்பட்டுள்ளன. கற்போர் அக்கதைகளுக்குள் மறைந்திருக்கும் தத்துவத்தை ஆராயவேண்டும் என்பது அடிகளாரின் கருத்தாகும்.

"வேதநெறி ஆகமத்தின் நெறி புராணங்கள்
விளம்புநெறி, இதிகாசம் விரித்த நெறி முழுதும்
ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் கூட்டி
உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே"

-வள்ளலார் திருவருட்பா - 6வது திருமுறை

புனைவுகள் அகற்றப்பட்டு அவை சுட்டும் உண்மைகளை எடுத்துப் பேசவேண்டும் என்பதே வடலூர் வள்ளலாரின் கருத்து.

தசக்கிரீவம் என்பதன் கருத்து பத்து தலை அல்லது முடி ஆகும்.

பெற்றார் சூட்டிய தசக்கிரீவன் என்ற பெயர், காலப்போக்கில் 10தலைகள் என்ற புனைவு ஏற்பட்டு, பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கலாம். இது உருவகக் கதை என்ற பகுப்பைச் சாரும்.

இராவணன் ஒரு சிவபக்தன். திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரால் தோத்திரிக்கப்பட்ட சில பதிகங்களில் எட்டாவது பதிகம் இராவணனைப் பற்றியதாகும்.

மண்டோதரி திருக்கேதீஸ்வர நாதனை நாளும் பொழுதும் ஆராதனை செய்து வாழ்ந்த அரசகுமாரி. இராவணன் மண்டோதரியைத் திருமணஞ் செய்தான் என்று திருக்கேதீஸ்வரம் சம்பந்தமான நூல்கள் கூறுகின்றன. அவன் 10தலைகள், 20தோள்கள், 20கைகள் உடைய ஒரு பயங்கரத் தோற்றம் உள்ளவனாக இருந்தால், எந்தப் பெண்ணும் அந்தப் பயங்கர உருவத்தை விவாகம் செய்திருக்கமாட்டாள். எனவே இராவணன் ஒரு சாதாரண தோற்றம் உடைய மனிதன் என்பது தெட்டத்தெளிவு. அரக்கன் - பாரிய உடல் உடையவன்.

இராமாயணம் உண்மை நிகழ்வு என்பதற்கு பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. புனைவுகள் அகற்றப்படவேண்டும் என்பதற்கு மேலும் சான்றுகள் உள்ளன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருக்கேதீஸ்வரப் பதிகத்தில் கூறியுள்ளார்,

"விருது குன்றமா மேருவி னாணர
வாவென லெரி யம்பாப்
பொருது மூவெயில் செற்றவன் பற்றிநின்
றுறைபதி யென்னாளும்

தாரகாக்கன், கமலாக்கன், வித்யுன்மாலி என்ற அசுரர்கள் முறையே பொன், வெள்ளி, இரும்பினால் ஆக்கப்பட்ட கோட்டைகளில் இருந்து தேவர்களுக்கு

அட்டூழியங்களைச் செய்தனர். சிவபெருமான் அக்கோட்டைகளை அழித்தார் என்பது சம்பந்தப்பெருமானின் கூற்றாகும்.

திருமூலர் இக்கூற்றை மறுதலித்துப் பின்வருமாறு பாடியுள்ளார்.

"இப்பணி செஞ்சடை ஆதிபுரா தனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புர மெய்தமை யாரறி வாரே"

அவர் கூற்று மும்மலம் என்பது ஆணவம், கன்மம், மாயையைக் காட்டுகின்றது. ஆன்மாக்களின் நன்மைக்காக மும்மலங்களை சிவனார் அழித்து வருகின்றார். கோட்டைகள் அவையேதாம். அக்கருத்தை அழுத்துவதற்காக "ஆரறிவாரே" என்றார். எனவே கோட்டையென்பது மும்மலத்தைக் குறிக்கும்.

இது உருவகக் கதையாகும். வேத உண்மைகளை விளக்கும் கண்ணாடி புராணங்கள். அக்கண்ணாடி மூலமாக அக்கதைகளில் புதைந்துள்ள உண்மைகளை ஆராயவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிச் சைவத்தை விளக்கியவர் வடலூர் வள்ளலார் இராமலிங்கம் என்ற பெயர் தாங்கிய முனிவர். அவர் அருள் வள்ளல், அவர் கூறினார்: அறத்துக்குத் திருக்குறள், சாத்திரத்துக்குத் திருமந்திரம், தோத்திரத்துக்குத் திருவாசகம்.

இராவணனுக்கும் இராமனுக்கும் போர் நடந்துகொண்டிருந்த பொழுதில் இராமன் பிரமாஸ்திரம் என்னும் அம்மை இராவணன் மீது ஏவினான். அது இராவணன் மார்பில் பாய்ந்து அவனுடைய உடலுக்குள் புகுந்து, உடல் உறுப்புக்கள் முழுவதையும் சிதைத்தது. இராவணனின் சிரசு முகத்துடன் தலைகீழாக விழுந்தது.

"கார்நின்ற மழைநின்று முருமுதிர்வு வென்த்திணிவெனத்
தோட் காட்டி நின்றலும்
தார்நின்ற மலைநின்றும் பணிக்குலமும்
மணிக்குலமுந் தகர்ந்து சிந்தப்
போர்நின்ற விழிநின்றும் பொறிநின்று புகையோடுங்
குருதி பொங்கத்
தேர்நின்று நெடுநிலத்துச் சிரமுகங் கீழ்ப்பட
விழுந்தான் சிகரம் போல்வான்

பொழிப்புரை

போரில் நிலைத்த நின்ற அரக்கஇனமான மலைக்குச் சிகரம்போல் இருந்தவனான இராவணன் கருநிறம் பொருந்திய மேகத்திநின்றும் இடிஉதிர்வதுபோல நெருங்கிய தோள் தொகுதியினின்றும் மாலை தாங்கிய மலைபோன்ற மார்பினின்றும் ஆபரணத் தொகுதிகளும் இரத்தினத் தொகுதிகளும் உடைந்து சிதறவும், விழியினின்று தீப்பொறி வெளிப்பட்டு நின்று புகையுடன் குருதி பொங்கவும் தேரிநின்று பெரிய நிலத்திலே சிரசுடன் சேர்ந்து முகம் கீழ்ப்பட விழுந்தான்.

இங்கே "முகம் கீழ்ப்பட விழுந்தான்" என்ற ஒருமையில் சொல்லப்பட்டுள்ளது. சிரமுகங்கள் கீழ்ப்பட என்று பன்மையில் சொல்லப்படவில்லை. எனவே ஒரு சிரத்தை வீழ்த்தியதும் "நெடுநிலத்து" வீழ்ந்தான்.

மூலம் - இராமாயணம், யுத்தகாண்டம்

இராவணன் வதைபடலம்

ஆகினும், மாயாசாலத்தில் தேர்ச்சிபெற்ற அரக்கன் தனக்குத் தேவைப்படுங் காலங்களில் பத்துச் சிரசுகளையும் இருபது கைகளையும் காண்பித்திருக்கலாம். மாரீசன் என்ற அரக்கன் மான் வடிவத்தில் சீதையிருந்த மடத்துக்கு வந்தான் என்பதும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது.

## சிவனாரின் நவபேதம்

முதலாவது தேவாரத்தில் உள்ள "நீறணி திருமேனி"யின் சுருக்க விளக்கம்

சிவபெருமான் ஆன்மாக்களுக்கு முத்தி இன்பம் அளிக்கும் பொருட்டு ஐந்தொழில் செய்வதற்காக "நவபேதங்கள்" என ஒன்பது திருமேனிகளைக் கொள்கின்றார்.

1. பரமசிவன் (பரமநாதன்)
2. பராசக்தி (பரவிந்து)
3. சிவன் (அபரநாதம்
4. சக்தி (அபரவிந்து)

(3–4: இலயசிவன்; 1–4: அருவத்திருமேனி)

5. சதாசிவன் (அருளல்) போகசிவன் - அருவுருவத்திருமேனி
6. மகேசுரன் - மறைத்தல்
7. உருத்திரன் - அழித்தல்
8. திருமால் - காத்தல்
9. பிரம்மன் - படைத்தல்

(6–9: அதிகார சிவன்; உருவத்திருமேனி)

இந்த ஒன்பது திருமேனிகளும் சிவபெருமானேயாவர்.

# " வேள்வி தடுத்தவர்"

இத்தேவாரப் பதிகத்தில் எட்டாவது தேவாரத்தில் " வேள்வி தடுத்தவர் " என்று கூறப்பட்டுள்ளது .

இங்கே " கேள்வி " என்பது தக்கனால் இயற்றப்பட்ட வேள்வியைக் குறிக்கின்றது. காலமாக பிரம தேவரின் புதல்வன் - நீண்டகாலமாக தவஞ் செய்து சிவபெருமானிடம் பல வரங்களைப் பெற்றவன். பிற்காலத்தில் சிவபெருமானை அவமதித்தான்.

தக்சனுடைய மகள் தக்சாயினியை சிவபெருமான் தனது சக்தியாக ஏற்றுக் கொண்டார். தக்சன் ஒரு யாகம் செய்ய ஆரம்பித்தான். தனது மகள் தக்சாயினிக்கோ அல்லது பரம சிவனுக்கே அழைப்புவிடவில்லை. அவன் பரமனை நித்தித்தான். உமாதேவியார் வலிந்து அவ்விடம் சென்றார். தக்கன் நிந்தனை செய்தான்.

"தந்தை தன்னொடுந் தாயி லாதவன்
சிந்தை யன்புறுந் தேவி யானநீ
யிந்த வேள்வியா னியற்றும் வேலையில்
வந்த தென்கொலோ மகளிர் போலவே"

பொழிப்புரை

தந்தை, தாய், இல்லாதவன், பித்தன் போல் நினைத்தபடி நடக்கின்றவனின் மனையாள் நீ ஏன் இங்கு வந்தாய்?

உமை வருபடலம் - கந்தபுராணம்

மேலும் நிந்தித்தான்

" ஏய முக்குணத் தியலுஞ் செய்கையுட்
தீய தொல்குணச் செய்கை யாற்றியே
பே யோ டாடல்செய் பித்தன் தேவியாய்
நீயு மாங்கவன் நிலைமை யெய்தினாய் "

பொழிப்புரை

முக்குணங்களால் நடக்கின்ற முத்தொழில்களுள், கொடிய செயலான சங்கார திருத்தியத்தை செய்து, பேய்களோடு கூத்தாடுகின்ற பித்தனுக்கு மனைவியாய்,

நீயும் அந்நிலை அடைந்து விட்டாய்

உமைவருபடலம் - கந்தபுராணம்

இக்கூற்றுகளைக் கேட்டமாத்திரம் உமாதேவியாருக்கு எல்லையற்ற கோபம் பொங்கியது. சங்காரத் தொழில், தீய செயலன்று அது அநுக்கிரகச் செயல் என்று உமாதேவியார் கூறினார், மேலும் கூறுவார்.

" சிவனெ னுந்துணைச் சீரெழுந்தினை
நுவலு வோர்கதி நொய்தி லெய்துவா
ரவனை யெள்ளினர் யாரி தாற்றுவா
ரெவனை யுய்குதி யிழுதை நீரை நீ "

உவமைவரு படலம்

பொழிப்புரை

சிவனென்னு நாமத்தில் உள்ள சிவ என்கின்ற இரண்டாகிய சிறப்புப் பொருந்திய எழுத்துக்களை, உச்சரிப்போர் சிவகதி எய்துவர். நீ யோ அப்பெருமானை இகழ்ந்தாய். ஆன காரணத்தால், நீ அறிவிலிகளின் தன்மையுடையாய், சிவ, சிவ என்ற தொடர்ந்து கூறுவோருக்குச் சிவகதி விரைவில் கிடைக்கும்.

"குந்தம் வெம்பலகை தோமர மெழுக்கு லிசம்வாள்
செந்த ழற்கமுழுன் சதுலமொரு பீலி சிலைகோன்
முந்து தண்டமவி ராழிவசி யால முதலா
மந்த மில்படைக ளங்கைக டொறுங்கு லவவே "

உரை

குந்தம் - ஈட்டி, வெம்பலகை - கொடிய பரிசை தோமரம் - இருப்புலக்கை, எழு - வளைதடி, குலிசம் - வச்சிராயுதம், வாள் - கத்தி, செந்தழல் கழுமுள் - அக்கினி காலுகின்ற கழுமுள், சூலம்- சூலம், பீலி - பெருஞ்சவளம், சிலை - வில், கோல் - அம்பு, முத்து தண்டம் - முதன்மை பொருந்திய தண்டாயுதமும், அவிர் ஆழி - ஒளிருகின்ற சக்கரம், வசிவாள், ஆலம் - மழுர் முதலாம் அந்தமில் படைகள், அம்மை தொறும் குலவ - அழகிய கைகள் தொறும் விளங்க வீரபத்திரர் சிவபெருமானின் நெற்றிக் கண்ணின் நின்று அவதரித்தார் - வீரபத்திரப் படலம் - கந்தபுராணம் வீரபத்திரப் படலம் - கந்தபுராணம் வீரபத்திரரைப்போன்று பயங்கர தோற்றத்துடன் அவரின் சக்தியான பத்திரகாளியும் தோற்றினார்

"கண்டு மற்றது வீரபத்திரனெனும் கடவுள்
கொண்ட சீற்றமொ டேகியேதக்கனைக் குறுகி
அண்ட ரோடு நீ யீசனை யிகழ்ந்தனை யதனாற்
தண்ட மீனெ வாள் கொடே யவன்தலை தடிந்தான் "
தடிந்தான் - வெட்டினார்

- யாகசங்கார படலம் - கந்த புராணம்

இறுதியில் யாகம் அழிக்கப்பட்டு அழுக்காறு செய்யப்பட்டது

"தந்தை பிரான்வெகுண்டான் தக்கன் வேள்வியை
வெந்தழல் ஊடே புறப்பட்ட விண்ணவர்
முந்திய பூசை முடியார் முறை கெட்டுச்
சிந்தினர் அண்ணல் சினஞ் செய்த போதே "

- தக்கன் வேள்வியில் கலந்து கொண்ட தேவர்கள் சீரழிந்து ஓடிய திறம் கூறப்பட்டுள்ளது இலிங்க புராணம்

பின்பு தக்கன் மன்னிக்கப்பட்டுத் துவாரபாலகருள் ஒருவனாக அமைக்கப்பட்டான்.

துவாரபாலகர் - இமயமலையில் சிவபிரான் உறையும் கோவிலின் வாசற்காவலர்.

# முடிவுரை

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே

-திருமந்திரம்

"செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரோடு மரீஇ
மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன்எனத் தொழுமே

-சிவஞானபோதம்

பொழிப்புரை

ஞானிக்காயினும் சிவபெருமானுடைய செந்தாமரை மலர்போன்ற திருவடிகளைச் சேராமல் ஆணவமலம் தடைசெய்யும். அம்மலத்தை வாசனையின்றி நீக்கி, சிவ அன்பரோடு சேர்ந்து, உலகமயக்கம் சிறிதும் இன்றி, இறைவன்பால் இடையறாத அன்பினால், சிவபக்தியில் திளைத்திருக்கும் சிவனடியார் வேடத்தையும், சிவ ஆலயங்களையும் இறைவன் எனவே வழிபட்டு சீவன் முத்தர்கள் இருப்பார்கள்.

சுருக்கம்: சிவனடியார்களையும் திருக்கோவிலையும் சிவனெனவே அர்ச்சிக்க வேண்டும்.



நூலாசிரியர்
சைவப்புலவர் திரு. அ.ஶ்ரீஸ்கந்தராசா M.A
திருக்கேதீஸ்வரம்

# வானவில் வெளியீட்டகம்

எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டம்

நூல் வெளியீடென்பது குழந்தையைப் பெற்றெடுப்பது போன்றது. அதற்காக எழுத்தாளன் படுகின்ற சிரமம் பிரசவ வேதனை, இதனால், எத்தனையோ ஆற்றல் மிக்க எழுத்தாளர்களின் சிந்தனைகள், ஆரவாரம் எதுவுமின்றி, அவர்களுக்குள்ளேயே கருச்சிதைவாகிக் கொண்டிருக்கின்றன.

இதனை, வானவில் வெளியீட்டகம் உளப்பூர்வமாக உணர்கின்றது. அதனால், எழுத்தாளர் ஊக்குவிப்புத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தி வருகிறது.

1) எழுத்தாளர்களின் ஆக்கங்களுக்கு, நிபந்தனையின்றியும், கட்டணம் எதுவுமின்றியும் கணனி மயப்படுத்தி நூல்வடிவம் அமைத்துக் கொடுத்தல்

2) வானவில் வெளியீட்டகத்தினால் வெளியிடப்படுவதற்கென எழுத்துரு வில் தரப்படும் ஆக்கங்களுக்கான வெளியீட்டினையும், சந்தைப் படுத்தலையும் மேற்கொள்ளலும் எழுத்தாளர்களை கௌரவித்தலும்

3) வானவில் வெளியீட்டகமும், எழுத்தாளரும் இணைந்து நூல்களை வெளியிடுவதில் சலுகை கட்டணமுறையும் ஊக்குவிப்பும்.

4) எழுத்தாள் தனது பொறுப்பிலேயே நூல்களை வெளியிடுவதில் சலுகை கட்டணமுறையும் ஊக்குவிப்பும்

வெளியீட்டாளர்களுக்குள் போட்டி நிலை உருவாகி உலகின் எந்த மூலையிலும் வெளிக் கொணரப்படாதிருக்கும் ஆக்கங்கள் எதுவும் இல்லை என்ற நிலை உருவாகுமாயின் அதனை மனமகிழ்வோடு வானவில் வெளியீட்டகம் வரவேற்கும்.

அன்புடன்
வானவில் வெளியீட்டகம்

திருகோணமலை.
0777426175

கோணேஸ்வரத்தின் இன்றைய முகவாய்க் காட்சி



ASTRA 0777 426175